உ
கடவுள் துணை.

# செந்தமிழ்

தொகுதி-கரு.] நளஹூ மார்கழிமீ [பகுதி-உ.
Vol. XV. December—January, 1917. No. 2.

## வஞ்சி.

—o—

வஞ்சியென்பது சேரராஜதானி. அதை மேல்கடலையடுத்துள்ள மலைநாட்டின்கண்ணதோர் நகரமென்பார் ஒருசாராரும், ஆநிலைக்கருவூர் என்பார் மற்றொருசாராரும் ஆயினார்கள். ஆநிலைக்கருவூரென்பார் சொல்லும் நியாயங்களெல்லாவற்றையும் மகா-ா-ா-ஸ்ரீ மு. ராகவையங்காரவர்களாற் சமீபகாலத்தில் வெளிப்படுத்தப்பட்டிருக்கிற "சேரன் செங்குட்டுவன்" என்னும்புத்தகத்தில் ஒருங்கேகாணலாம். மற்றொருசாரார் சொல்லும் நியாயங்களைத் தொகுத்து இதுகாறும் யாரும் வெளிப்படுத்தியதாகத் தெரியவில்லை. அவற்றை எனக்குத்தெரிந்த வரையிற் றொகுத்துச்சொல்லுவதோடு ஐயங்காரவர்கள்புத்தகத்திற் கண்ட நியாயங்களுக்கு எனக்குத்தோன்றும் சமாதானங்களையுஞ் சொல்லமுயலுவேன்.

முதலில் நாமெடுத்துக்கொண்ட விஷயஞ் சம்பந்தப்பட்டவரையில், தமிழ்நாடுகளின் முற்காலத்தமைதியைத் தெளிவுபடுத்தவேண்டியது உசிதமென்றுதோன்றுகிறது. குடநாடு, குட்டநாடுகளடங்கிய மலைநாடு மேல்கடலையடுத்துள்ளது; அது சேரனுடையராஜ்யம். புனனாடு அல்லது சோணாடு கீழ்கடலையடுத்துள்ளது; அது சோழனுடைய ராஜ்யம். இவையிரண்டிற்குமிடையே பரக்கவுள்ளது கொங்கர்நாடு; அதனுடைய ஆட்சி கைம்மாறிக்கொண்டே வந்திருக்கிறது. ஆநிலைக் கருவூர் கொங்கர்நாட்டின் கீழெல்லைக்கு அண்மையிற் கொங்கர்நாட்டிலுள்ளதெனச் சிலரும், சோணாட்டின் மேலெல்லைக்கு அண்மையிற் சோணாட்டிலுள்ளதெனச் சிலருங் கூறுவர். இப்பொழுது அது திருச்சிராப்பள்ளிஜில்லாவைச்சேர்ந்த நகரங்களிலொன்றாயிருக்கிறது. வஞ்சி மலைநாட்டிலுள்ளதென்பார், பேர்யாறு கடலிற் சங்கமமாகுமிடத்திற்குப் பக்கத்தேயுள்ளதெனக் கூறுகின்றனர். அவர்களிற் பெரும்பாலார் அதைக் கொடுங்கோளூரெனச் சொல்லுகின்றனர்.

*

ஆநிலைக்கருவூர் அல்லது சோணாட்டிலிருந்து மலைநாடுசெல்வதாயிருந்தாலும், மலைநாட்டிலிருந்து சோணாடுசெல்வதாயிருந்தாலும் இடையிற் பலகாவததூரம் விரிந்துகிடக்குங் கொங்கர்நாடுகடந்தே செல்லல்வேண்டும். கொடுங்கோளூரில் அரசுபுரிந்துகொண்டிருந்த மலைநாட்டரசனாகிய சேரமான்பெருமாள் சிதம்பரத்திலெழுந்தருளியிருக்கும் நடராஜப்பெருமானைத் தரிசிப்பதற்காகப் புனனாடுசென்றதைப் பெரியபுராணத்தில் அடியிற்கண்டசெய்யுள் விளக்கும்.

"அந்நாட்டெல்லைகடந்தணையவமைச்சர்க்கெல்லாம்விடையருளி
மின்னார்மணிப்பூண்மன்னவனார்வேண்டுவாரையுடன்கொண்டு
கொன்னாரயில்வேன்மறவர்பயில்கொங்கர்நாடுகடந்தருளிப்
பொன்னாட்டவருமணைந்தாடும்பொன்னிநீர்நாட்டிடைப்போவார்"

(கழறி-பு-செய். 50).

இவ்விடத்து "அந்நா"டென்றது மலைநாட்டையென்பது இச்செய்யுளுக்கு முந்தியசெய்யுளால் விளங்கும். "பொன்னிநீர்நா"டென்றது சோணாட்டை. சேரமான்பெருமாள் சிதம்பரமும் பிறகு திருவாரூருஞ் சென்று, சுந்தரமூர்த்திநாயனாருடன் சிலகாலங்கூடியிருந்து, பிறகு அவரையுமழைத்துக்கொண்டு திருவையாற்றிற்குச்சென்று சிவபிரான் றெரிசனம் இருவருஞ்செய்துகொண்டு மலைநாடடைந்த விவரம் பின்வரும் பெரியபுராணச்செய்யுள்களா லறியலாம்.

"ஆயசெயலினதிசயத்தைக்கண்டக்கரையிலையாறு
மேயபெருமானருள்போற்றிவீழ்ந்துதாழ்ந்துமேல்பாற்போய்த்
தூயமதிவாழ்சடையார்தம்பதிகள்பிறவுந்தொழுதேத்திச்
சேயகொங்கர்நாடணைந்தார்திருவாரூரர்சேரருடன்"

(கழறி-பு-செய். 139).

"கொங்கர்நாடுகடந்துபோய்க்குலவுமலைநாட்டெல்லையுற"

கழறி-பு-செய். 40.

மலைநாட்டுக்கும் சோணாட்டுக்குமிடையிற் கொங்கர்நாடு பரந்துள்ளதென்பதைக்காட்டப் பலமேற்கோள்கள் உள்ளன. விரிவஞ்சி விடுத்தேன்.

இம்மட்டி விதுநிற்க; வஞ்சியென்னும்பெயர் கொடுங்கோளூருக்குண்டோவென்பதை இப்பொழுது விசாரிப்போம். அப்பெயர் அவ்வூர்க்கில்லையேல் மேலாராய்ச்சியா லொருபயனு மில்லையாகும். சேரமான்பெருமாணாயனார்புராணத்திற் பின்கண்டபாடல் காணப்படுகிறது.

"சேவீற்றிருந்தார்திருவஞ்சைக்களமுநிலவிச்சேரர்குலக்
கோவீற்றிருந்துமுறைபுரியுங்குலக்கோமூதூர்கொடுங்கோளூர்"
(கழறி-பு-செய். 1).

இதனாற் கொடுங்கோளூர் சேரராஜராஜதானியென்றும், திருவஞ்சைக்களம் அதனொருபாகமாயமைந்துள்ளதென்று மேற்படும். அப்புராணத்துள்ளேயே சேரமான்பெருமாணாயனார் சோணாட்டுக்குப்புறப்படுவதைப்பற்றிப் பின்கண்டவாறு சொல்லப்பட்டிருக்கிறது.

"பொன்னார்மௌலிச்சேரலனார்போற்றுமமைச்சர்க்கீதியம்பி
நன்னாட்கொண்டுபெரும்பயணமெழுகவென்றுநலஞ்சாற்ற
மின்னாரயில்வேற்குலமறவர்வென்றிநிலவுஞ்சிலைவீரர்
அந்நாட்டுள்ளாரடையநிரந்தணைந்தார்வஞ்சியகநகர்வாய்"
(கழறி-பு-செய். 46).

இவ்விடத்துக் கொடுங்கோளூரையே வஞ்சியென்று சொல்லப்பட்டிருப்பது தெற்றெனவிளங்கும். சேரமான்பெருமாள்காலத்துச் சேரர்களுக்கும் ஆநிலைக்கருவூருக்கும் யாதொருசம்பந்தமுமில்லையென்றும், இவ்விடத்து வஞ்சியென்றது ஆநிலைக்கருவூரைக் குறிக்காதென்றும் பெரியபுராணங் காட்டுகிறது. மேற்கண்ட சேரமான்பெருமாணாயனார் புராணத்தில் மலைநாட்டிலுள்ள சேரர்தலைநகரைச்சொல்லும்போது ஓரிடத்திற் கொடுங்கோளூரென்றும், மற்றோரிடத்தில் மகோதையென்றும், வேறோரிடத்தில் வஞ்சியென்றுஞ் சொல்லுகிறார். அவர் சொல்லுவதற்கு அந்தவிடத்திற் கொடுங்கோளூர் ஒன்றைத்தவிர வேறுநகரில்லை.

மேலும், பெரியபுராணம் வெள்ளானைச்சருக்கத்திற் சுந்தரமூர்த்திநாயனாரை எதிர்கொண்டழைத்துச் சேரமான்பெருமாணாயனார் கொடுங்கோளூரடைந்தவிஷயம் அடியிற்கண்டவாறு சொல்லப்பட்டிருக்கிறது.

"உதியர்பெருமான்பெருஞ்சேனையோதங்கிளர்ந்ததெனவார்ப்பக்
கதிர்வெண்டிருநீற்றன்பர்குழாங்கங்கைகிளர்ந்ததெனவார்ப்ப
வெதிர்வந்திறைஞ்சுமமைச்சர்குழாமேறுமிவுளித்துகளார்ப்ப
மதிதங்கியமஞ்சணியிஞ்சிவஞ்சிமணிவாயிலையணைந்தார்"
(வெள்ளானை-செய். 22).

இவ்விடத்திற் கொடுங்கோளூரே வஞ்சியென்றுவழங்கப்பட்டிருப்பது தெளிவாய்விளங்கும்.

மேலும், ஐயங்காரவர்கள் சேரர்கள் தேவாரங்களேற்படுங்காலத்துக்குமுந்தியே ஆநிலைக்கருவூரை முற்றவும்விட்டு மலைநாட்டுக் கொடுங்கோளூரைத் தங்கள் தலைநகரமாக்கிக்கொண்டனரென்று சொல்லுகிறார்கள். அவ்வாறு கொடுங்கோளூரிற் சேரர் அரசாளுங்காலத்திற் சம்பந்தமூர்த்திநாயனாரால் திருமூக்கீச்சரம் (உறையூர்) என்னும் தலத்துக்கேற்பட்ட தேவாரம் பின்கண்டவாறிருக்கின்றது.

"தென்னன்கோழியெழில்வஞ்சியுமோங்குசெங்கோலினன்"

இதனாற் சேரர்தலைநகர் வஞ்சியென்று சொல்லப்பட்டிருப்பது நன்குவிளங்கும். அக்காலத்திற் சேரராஜதலைநகர் கொடுங்கோளூரென்றும் ஆநிலைக்கருவூரன்றென்றும் ஐயங்காரவர்கள் ஒப்புக்கொள்ளும்போது இவ்விடத்து வஞ்சியென்றது கொடுங்கோளூரென்றே அவர்கள் ஒப்புக்கொண்டு தீரவேண்டும். கி. பி. 8-ம்நூற்றாண்டுப் பாண்டியசாசனங்களிற் கூடல், வஞ்சி, கோழியிவைகளைப் பாண்டியன் புதுப்பித்தானென்று சொல்லப்பட்டிருக்கிறது. கி. பி. 8-ம்நூற்றாண்டிற் சேரர்கள் கொடுங்கோளூரில் அரசாண்டுவந்தார்களென்றும், அக்காலத்தில் ஆநிலைக்கருவூருக்கும் சேரர்களுக்கும் யாதொருசம்பந்தமுமில்லையென்றும் ஐயங்காரவர்கள்சொல்வதா லேற்படுகிறது. அப்படியானால் அக்காலத்தில் வஞ்சியென்பது கொடுங்கோளூரென்று சொல்வதொன்றுதானே பொருந்தும். மேலும் கவர்ண்மெண்டாரால் நியமிக்கப்பட்ட சாசனபரிசோதகஉத்தியோகஸ்தர்களும் வஞ்சியென்பதைத் திருவஞ்சைக்களமெனக் கொண்டார்கள். அது அடியிற்கண்டதால் விளங்கும். " Renewed the walls of Kudal (Madura) Vanji (Tiruvanjikkulam in the Cochin State) and Koli (Uraiyur near Trichinopoly)". Report of the Department of Epigraphy Madras for 1907—1908 page 63.

நான் மேற்சொல்லியவைகளாற் கொடுங்கோளூருக்கு வஞ்சியென்கிற பெயருண்டென்பது ஐயமறத்தெரியக்கிடக்கிறது. அவ்வூருக்குக் கருவூரென்னும் பெயருண்டாவென்று பார்ப்போம். தமிழ்க்குப் பேரிலக்காய்விளங்கும் புலவர்பெருமானாகிய சாமிநாதையரென்னுமியற்பெயர்வாய்ந்த பெரும்பேராசிரியர் தம்மால் வெளியிடப்பட்டிருக்கிற பலபுத்தகங்களிற் சேரராஜராஜதானியாகிய கருவூர் கொங்கு

நாட்டுக்கருவூரன்றென்றும், அதற்கு வஞ்சியென்றுமறுபெயருண்டென்றும், வஞ்சி மலைநாட்டிலுள்ளதென்றும் எழுதியிருக்கிறார்கள். நிகண்டுகளினாலே வஞ்சிக்குக் கருவூர் என்னும்பெயரும் உண்டென்று தெரிகிறது. ஐயங்காரவர்களும் தம்புத்தகத்தில் "வஞ்சிக்குக்கருவூரென்பதும்ஒருபழம்பெயர்" என்று எழுதியிருக்கிறார்கள். இவைகளினாலேசேரராஜதானியெதுவோ அது வஞ்சியென்றும், கருவூரென்றும் அழைக்கப்படுமென்று தெரிகிறது. கும்பகோணம் நாகேசுரஸ்வாமிகோவில் மதிலில் வரைந்துள்ளதும், சிலாசாசன உத்தியோகஸ்தர்களால் வெளிப்படுத்தப்பட்டிருப்பதுமான சிலாசாஸனத்தால் மிழலைக்கூற்றத்தைச் சேர்ந்த கருவூரொன்று உண்டென்பது விளக்கமாகிறது. ஒருபெயர் பலவூர்களுக்கிருப்பதை எங்கும் பார்க்கலாம். பாபநாசமெத்தனையுள்ளன. குற்றாலமெத்தனை. முசிறியெத்தனை. தஞ்சாவூரெத்தனை. கருவூரென்னும் பெயரைக்கொண்டுமட்டும் ஒருஊர் சேரராஜதானியாக வெண்ணப்படுமா? பெயரொற்றுமையைக்கொண்டுமட்டும் ஒரு முடிவுக்குவருதல் கூடாதென்று ஐயங்காரவர்களும் சொல்லுகிறார்கள்.

வஞ்சியென்னும்பெயர் ஆநிலைக்கருவூருக்குண்டாவென்று விசாரிப்போம். ஐயங்காரவர்கள், "இக்கருவூரே வஞ்சியெனத் தமிழிலும், வஞ்சுளாரண்யமென வடமொழியிலும் வழங்கப்படுவதாம்" என்று முன்சொன்னபுத்தகத்தில் எழுதியிருக்கிறார்கள். வஞ்சுளாரணியமென்பது வஞ்சுளம், அரணியம் என்னுமிரண்டுமொழிகள் சேர்ந்தாகியவொரு தொடர்மொழி. வஞ்சுளமென்னும் வடமொழிப்பதத்துக்கு வாசஸ்பத்யம் சப்தகல்பத்ருமம் முதலிய வடமொழிக்கோசங்களில் ஸ்தாவரபரமாய் நாலேயர்த்தங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அவையாவன (1) திமிசவிருக்ஷம் (2) அசோகவிருக்ஷம் (3) வேதஸவிருக்ஷம் (4) ஸ்தலபத்மவிருக்ஷம் என்பனவேயாம். ஸ்தாவரபரமாய் வேறு அர்த்தங்கிடையாது. தஞ்சாவூர்ஜில்லா நாச்சியார்கோவிலென்னுந் திருப்பதியில், தாயாருக்கு வஞ்சுளாம்பாளென்று பெயருண்டு. அது வேதஸவிருக்ஷத்தைக்கொண்டுவந்ததென்று அந்தஸ்தலத்தார்சொல்லுகிறார்கள். ஆநிலைக்கருவூருக்கே வஞ்சுளாடவியென்றும் ஒரு பெயருண்டு. அரணியம், அடவி, வனமென்பன ஒருபொருட்கிளவி. வனமென்பது அநேகவிருக்ஷஞ்சேர்ந்திருக்கிற இடமென்று சப்தகல்பத்ருமத்திலும், விருக்ஷசமுதாயரூபமாயுள்ளதென்று வாசஸ்பத்தியத்திலுஞ்

சொல்லப்பட்டிருக்கிறது. ஐயங்காரவர்களும் தாம் மேற்படிபுத்தகத்திற் கொடுத்திருக்குங்குறிப்பில் "வஞ்சி மரம்நிறைந்தகாடாதலி னிப்பெயர்பெற்றதென்பார்" என்று வரைந்துள்ளார். இவைகளினாலே ஆநிலைக்கருவூருக்கு வஞ்சுளாரணியமென்றும், வஞ்சுளாடவியென்றும் பெயர்வந்தது, மேலேகண்ட நால்வகைவிருக்ஷங்களில் ஒன்றைக்கொண்டென்று ஏற்படுகிறது. நால்வகைவிருக்ஷங்களி லொருவகை ஆநிலைக் கருவூரைச்சுற்றி வனமாயிருந்திருக்கவேண்டும். சேரரதுராஜதானியாகிய வஞ்சிக்கு எதைக்கொண்டு அப்பெயர்வந்ததென்று பார்ப்போம். மணிமேகலையுட் கச்சிமாநகர்புக்ககாதையில், "பூங்கொடிப்பெயர்ப்படூஉந், திருந்தியநன்னகர்" (அடி-101-2) என்றும், வஞ்சிமாநகர்புக்ககாதையில், 'பொற்கொடிப்பெயர்ப்படூஉம்பொன்னகர்' (அடி-92) என்றும் கண்டிருக்கிறது. இவைகளால் ஒருபூங்கொடியினாலே சேரர் வஞ்சிக்கு அப்பெயர்வாய்ந்ததென்றும், வஞ்சுளமென்னும் ஒருவகை விருக்ஷநிறைந்த காட்டால் ஆநிலைக்கருவூருக்கு வஞ்சுளாரணியம் வஞ்சுளாடவியென்னும்பெயர்கள்வாய்ந்தனவென்றுந்தெரிகிறது. மணிமேகலைப்பதிகத்தில்,

"உற்றவளாங்கோருயர்தவன்வடிவாய்ப்
பொற்கொடிவஞ்சியிற்பொருந்தியவண்ணமும்" (மணிமே-பதி. அடி 85-86). என்றதனால்,

சேரரதுராஜதானிக்குக் கொடியைக்கொண்டு வஞ்சியென்னும் பெயர் வந்ததென்று விளங்குகின்றது. ஆநிலைக்கருவூருக்கு இவ்வாறு அப்பெயர்வருவதற்கு நியாயமில்லையென்று தெளிவாய்த்தெரிகிறது. தமிழிலுள்ள கருவூர்த்தலபுராணத்தைத் தம் கொள்கைக்குமேற்கோளாக ஐயங்காரவர்கள் காட்டுகின்றார்கள். இவ்விஷயத்தில் அது முற்றவுமங்கீகரிக்கக்கூடாததென்பதைப் பின்பு காட்டுவேன்.

கொடுங்கோளூரென்றபெயரோ பழையநூல்களுட் சிறிதுந் தெரியாததொன்றாகுமென்று ஐயங்காரவர்கள் சொல்லுகின்றார்கள்; உண்மையே. ஆநிலைக்கருவூருக்குப் பசுபதீச்சுரம், கெர்ப்பபுரி, ஆதிபுரி, பாஸ்கரபுரம், ஷண்மங்கலக்ஷேத்ரம், பிரமபுரி, கரபுரி, வஞ்சுளாரணியம், வஞ்சுளாடவி, ஆநிலையெனப் பலபெயர்கள் உண்டே. அவைகளி லொன்றேனும் பழையநூல்களுக்குத் தெரியுமா? ஐயங்காரவர்கள் சொல்லுவதைப்பார்த்தால் இந்த ஒருகாரணத்தைக்கொண்டே ஆநிலைக்கருவூர் சேரரதுராஜதானியாகிய வஞ்சியல்லவென்று ஏற்படுமே.

ஆநிலைக்கருவூர் எந்நாட்டைச்சேர்ந்த நகரமென்றும், அது யாருக்குச் சொந்தமாயிருந்துவந்திருக்கிறதென்றும் ஆராய்வோம். ஐயங்காரவர்கள் தம்புத்தகத்தில் ஓரிடத்தில், "சோழராதிக்கத்துக்குமுன்பு கருவூர்ப்பிரதேசம் சேரர்க்குச் சிறந்தபூமியாகக்கருதப்பட்டிருந்தமை பெறப்படும். சோழர்க்குமுன் இம்மண்டலம் கொங்குதேசராஜாக்கள் ஆட்சிக்குட்பட்டிருந்ததென்றும், அவருக்குமுற்பட்ட சங்ககாலத்தே தான் அது சேரரது சிறந்ததேசமாகி வஞ்சியெனப்பட்ட இக்கருவூரைத் தலைமைநகரமாகக்கொண்டு விளங்கியதென்றும் அறியத்தக்கன" என்றும், வேறிடங்களில், "கருவூர்ப்பிரதேசம் சேரர்க்குச் சிறந்தபூமியாகவிருந்தது. சங்ககாலத்துக்குப்பின்னர்ச் சோழராற்றற்கஞ்சிய சேரர் வஞ்சியைவிட்டுநீங்கித் தங்கட்குரிய மலைநாட்டிற் கடற்கரையிலுள்ள கொடுங்கோளூரைத் தலைமைநகரமாக்கிக்கொள்ளலாயினர். அச்செய்தியைச் சங்ககாலத்துக்குப்பிற்பட்ட தமிழ்மக்கள் முற்றும் மறந்துவிட்டனர். திருவாநிலைக்கோவிலைப்பற்றிய தேவாரப்பதிகங்களிலேனும் அக்கோயிலிற்கண்ட சாஸனங்களிலேனும் வஞ்சியின் பழஞ்செய்தி சிறிதுங் குறிக்கப்படவில்லை. பிற்காலத்திற் சோழராதிக்கம் பெருகியபோது கருவூர் சோணாட்டின் முக்கியநகரங்களி லொன்றாகி விட்டதாகத் தெரிகிறது" என்றும் எழுதியுள்ளார்கள். இதனாற் சங்ககாலத்தே கருவூர்ப்பிரதேசஞ் சேரர்க்குச் சிறந்ததேசமாகி விளங்கியதென்றும், பின்னர்ச் சோழராற்றற்கஞ்சிய சேரர் அதைவிட்டுநீங்கிக் கொடுங்கோளூரைத் தலைமைநகரமாக்கிக்கொண்டனரென்றும்,பின்னர் அது கொங்குதேசராஜாக்க ளாட்சிக்குட்பட்டிருந்ததென்றும், பின்னர்ச் சோழராட்சிக்குவந்ததென்றும் ஏற்படுகிறது. அப்படிவந்தது தேவாரம் சிலாசாஸனங்களேற்படுங்காலத்துக்கு முந்தியும், சங்ககாலத்துக்குப் பிந்தியுமென்றும் விளங்கும். சோழராற்றற்கஞ்சிச் சேரர் கருவூரைவிட்டுப்போனாற் கருவூர் உடனே சோழராட்சிக்குட்படாது கொங்குதேசத்தரசராட்சிக்குட்படுவதற்குக் காரணமென்ன? ஐயங்காரவர்கள் இவ்விஷயத்தில், தாம் சொல்லுவதற்கு ஆதாரமாயுள்ள மேற்கோள்களைக் குறிக்காமையினாலே எவற்றைக்கொண்டுசொல்லுகிறார்களென்று தெரியவில்லை.

இப்போது கருவூர் எந்நாட்டைச்சேர்ந்தது, யாருக்குட்பட்டுவந்திருக்கிறதென்பதைக் காட்டுவதற்கு மேற்கோள்களுள்ளனவாவென்று பார்ப்போம். புகழ்ச்சோழநாயனார்புராணத்திற் பின்கண்டசெய்யுள் காணப்படுகிறது.

"அங்கணினிதுறையுநாளரசிறைஞ்சவீற்றிருந்து
கொங்கரொடுகுடபுலத்துக்கோமன்னர்திறைகொணரத்
தங்கள்குலமரபின்முதற்றனிநகராங்கருவூரின்
மங்கலநாளரசுரிமைச்சுற்றமுடன்வந்தணைந்தார்" (புகழ்ச்-பு-செய்-11.)

தங்களென்றது, இவ்விடத்துச் சோழரது என்று பொருள்படும். இதனாற் கருவூர் புகழ்ச்சோழநாயனார்காலத்துச் சோழரதாயிருந்ததன்றியும், தொன்றுதொட்டுச் சோழர்களதாயிருந்துவந்தநகரமென்றுந் தெரிகிறது. "குலமரபின்முதற்றனி" யென்னு மடைமொழிகள், கருவூரெக்காலத்திலாவது பிறரரசாட்சிக்குட்பட்டிருந்ததென்பார் கூற்றை முற்றும் நிராகரிக்கும். புகழ்ச்சோழநாயனார்காலந் தெரியவில்லை. எறிபத்தநாயனார்புராணத்திற் பின்கண்டசெய்யுள் காணப்படுகிறது.

"மன்னியவநபாயன்சீர்மரபின்மாநகரமாகுந்
தொன்னெடுங்கருவூரென்னுஞ்சுடர்மணிவீதிமூதூர்" (எறிபத்த-பு-செய்-2.)

இதில் "அநபாயன் சீர்மரபின்மாநகரம்" என்னுந் தொடர்மொழியும், 'தொன்னெடுங்கருவூர்'என்னுந் தொடர்மொழியும் கருவூர் சோழர்க்கு இடையில்வந்தநகரமல்ல,என்றுமுள்ள தென்பதை வற்புறுத்துகின்றன. கருவூர்த்தமிழ்த்தலபுராணத்தை மேற்கோளாகக்காட்டுவது எனது கொள்கைக்கொத்ததல்லவாயினும், ஐயங்காரவர்கள் தமக்கு மேற்கோளாக அதிலுள்ள பலசெய்யுள்களைக் காட்டுவதனாற் புராணத்தி விதைப் பற்றி என்னசொல்லப்பட்டிருக்கிறதென்பதைப் பார்ப்போம். அப்புராணம் எறிபத்தச்சருக்கத்திற் பின்கண்டசெய்யுள் காணப்படுகிறது.

"முடிசூடரசருணங்குமணிமுன்றிலுடையாருலவியசீர்க்
குடிசூழ்கொங்கர்குடபுலத்தோர்கொணருந்திறைகண்டிடல்வேண்டிப்
படிசூழனிகமமைச்சர்பரிசனமொய்கொளத்தம்பழம்பதியாங்
கடிசூழ்வாவிக்கருவூரினணைந்தார்முரசங்கலந்தார்ப்ப" (கருவூர்ப்புராணம் எறிபத்தச்ச-செய்-ரு.)

இதில், "தம்பழம்பதியாம்" என்னுமொழிகள் கருவூர் சோழர்களுக்கு இடையில்வந்ததல்ல, தொன்றுதொட்டதென்றுகாட்டுகிறது. ஐயங்காரவர்கள் பிரமாணமாகக்கொண்ட தலபுராணம் அவர்கள்கொள்கையை விரோதிக்கிறது.

இதுநிற்க; கொடுங்கோளூரைப்பற்றி யென்னசொல்லப்பட்டிருக்கிறதென்று பார்ப்போம். சேரமான்பெருமாணாயனார்புராணத்தில்

அடியிற்கண்டசெய்யுள் காணப்படுகிறது. முன்னொருதரமிதைக்காட்டியிருக்கிறேன்.

"மாவீற்றிருந்தபெருஞ்சிறப்பின்மன்னுந்தொன்மைமலைநாட்டுப்
பாவீற்றிருந்தபல்புகழார்பயிலுமியல்பிற்பழம்பதிதான்
சேவீற்றிருந்தார்திருவஞ்சைக்களமுநிலவிச்சேரர்குலக்
கோவீற்றிருந்துமுறைபுரியுங்குலக்கோமூதூர்கொடுங்கோளூர்"
(கழறி-பு-செய். 1.)

இதில், "பழம்பதி" "குலக்கோமூதூர்" என்னுந்தொடர்மொழிகள் கொடுங்கோளூர் சேரர்களுக்குத் தொன்றுதொட்டுத் தலைமைநகரமாய் வந்திருக்கிறது; இடையிலேற்படுத்திக்கொண்டதல்ல; என்பதை நன்றாய்க்காட்டுகின்றன. மேற்கண்டபடி கருவூர் தொன்றுதொட்டுச் சோழரது நகரமாயும், கொடுங்கோளூர் தொன்றுதொட்டுச் சேரரது தலைநகராயு மிருந்துவந்திருக்கின்றனவென்பதை நான்காட்டிய மேற்கோள்கள் தெரிவிக்கின்றன. கருவூர் சோழர்களது ஐந்துராஜதானிகளிலொன்றாகப் பண்டிதர்களாலெண்ணப்பட்டுவருவது ஐயங்காரவர்களறியாததல்ல.

என்னால் மேற்காட்டப்பட்டிருக்கிறசெய்யுள்களால் கருவூர் சோணாட்டுநகரங்களிலொன்றாகத் தொன்றுதொட்டுக் கருதப்பட்டுவந்திருப்பதாய் ஏற்படும். மேலுங் காவிரிப்பாய்ச்சல் கருவூர்த்தாலுகாவில் ஆரம்பித்துவிடுகிறது. கருவூர்ப்பிரதேசம் சேரர்களுக்குச்சொந்தமாயிருந்தாற் காவிரிப்பாய்ச்சலுள்ளதேசமு மவர்களுக்கிருந்திருக்கவேண்டும். நீர்நாட்டி லெந்தப்பாகமாவது காவிரிநதியாவது அவர்களுக்குச் சொந்தமென்று அவர்கள் கொண்டாடியிருப்பதாய்த் தெரியவில்லை.

இனி, பூர்வசரித்திரவாராய்ச்சி, ஐயங்காரவர்கள்கொள்கையை எம்மட்டு மாதரிக்கிறதென்பதைப் பார்ப்போம். செங்குட்டுவன்காலம் அல்லது சங்ககாலம் கி. பி. 5-ம்நூற்றாண்டென்று ஐயங்காரவர்கள் தீர்மானித்திருக்கிறார்கள். தேவாரம்பாடிய ஞானசம்பந்தமூர்த்தி நாயனார்காலம் கி. பி. 7-ம்நூற்றாண்டென்று சரித்திரவாராய்ச்சிக்காரர்களாற் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. அந்நாயனார் ஒருவர் பதிகந்தான் ஆநிலைக்கருவூருக்கு ஏற்பட்டுள்ளது. ஐயங்காரவர்கள் கொள்கைப்படி 5-ம்நூற்றாண்டுக்கும் 7-ம்நூற்றாண்டுக்கும் இடையே சோழர்கள் கருவூரையாக்கிரமித்துக் கொண்டிருக்கவேண்டும். அக்காலத்திலிருந்த

சோழவரசர்களுடைய பெயராவது அவர்களது தலைநகரத்தின்பெயராவது அவர்களது ஆற்றலுள்ள எந்தச்செய்கைகளாவது இன்னவென்று சரித்திரவாராய்ச்சிக்காரர்களால் இன்னுங் கண்டுபிடிக்கப்படவில்லை. ஆனால் அவர்கள் அந்தக்காலத்தில் மேலான நிலைமையிலில்லையென்றுநினைப்பதற்கிடமிருக்கிறது என்பது பின்கண்டசெய்திகளாற்றெரியலாம். செங்குட்டுவன்காலத்திலேயே புகாரைக் கடல்கொண்டுவிட்டது. அதையாண்டுகொண்டிருந்த கிள்ளிவளவனைவிட்டுப்போய்விட்டான்; உறையூராட்சியையடையச் சோழர்குடிக்குரியோர் ஒன்பதின்மர்செய்த முயற்சிகள் பயனில்லனவாய்ப்போமாறு உறையூருக்கடுத்துள்ள நேரிவாயிலென்னுமிடத்திற் செங்குட்டுவனவர்களை யுத்தத்தில் ஜயித்துத் தன்மைத்துனன் கிள்ளிவளவனுக்குப் பட்டங்கட்டிவைத்தானென்பது சிலப்பதிகாரமுதலியவற்றாற்றெரிகிறது. செங்குட்டுவன்காலத்திற் சோழபாண்டியர்களவனுக்கடங்கினவர்களாயிருந்தார்கள்; அவன்கை மேலாகவிருந்ததென்பது ஐயங்காரவர்கள் புத்தகத்தினாலுஞ் சிலப்பதிகாரம் அகநானூறு முதலியவைகளாலும் விளங்கும். சேரரின் மற்றொருகிளையைச்சேர்ந்த தகடூரெறிந்தபெருஞ்சேரலிரும்பொறையென்பான் சோழர்மேல் வெற்றிகொண்டது பின்வரும் பதிற்றுப்பத்துச்செய்யுளால் விளங்கும். அது,

"காவிரிமண்டியசேய்விரிவனப்பிற்
புகாஅர்ச்செல்வபூழியர்மெய்ம்மறை" S 73 என்பது.

செங்குட்டுவன்காலத்திற்குப்பின்னர் மதுரையை யாட்சிபுரிந்த நெடுஞ்செழியனென்னும் பாண்டியன் சேரசோழர்கள்மேல், தலையாலங்கானமென்னுமிடத்திற் போர்புரிந்து வெற்றிகொண்டான். அவனுக்குத் தலையாலங்கானஞ்செருவென்றநெடுஞ்செழியனென்பதே பெயராயிற்று. அவனைச்சிறப்பித்து மாங்குடிமருதனாரென்னும் புலவர் பத்துப்பாட்டிலொன்றாகிய மதுரைக்காஞ்சியைப் பாடியிருக்கிறார். ஆராயுமிடத்துச் சோழர்கள் பலதோல்விகளையடைந்தார்களென்பதுதான் றெரிகிறது. இக்காலத்துக்குப்பிந்தியிருந்த சோழர்களுடைய பெயர், தலைநகர், செய்கைகள் மேற்கண்டபடி யொன்றுந்தெரியவில்லை. காஞ்சிப்பிரதேசத்தினாட்சி கி. பி. 3-ம்நூற்றாண்டுமுதற் பல்லவர்களிடத்தில் இருந்துவந்ததாகப் பூர்வசரித்திரவாராய்ச்சிக்காரர்களாற் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. கரிகாலன்காலத்தும் அதற்குச்சிலகாலப்

பிந்தியும் அது சோழராஜனுகையிலிருந்தது. காஞ்சியிலிருந்த பல்லவர்கள்கை நாளுக்குநாள் மேம்பட்டுக்கொண்டுவந்தது. கி. பி. 7-ம் நூற்றூண்டின் முற்பகுதியில் மகேந்திரவர்மனென்னும் பல்லவன், திருப்பாதிரிப்புலியூருக்கருகேயிருந்த பாடலிபுத்ரமென்னுநகரில் அரசாண்டு கொண்டிருந்தான். சைவசமயாசாரியராகிய அப்பர்சுவாமிகளை முதலில், தான் ஜைனனுயிருந்தகாலத்தில் இம்சித்தவனும், பின்னரவராற் சைவசமயத்தவனுகச்செய்யப்பட்டவனுமவனேஎன்பது மகா-ா-ா-ஸ்ரீ வெங்கய்யா M. A. அவர்கள் பல்லவர்களைப்பற்றி யெழுதியிருக்கும் வியாசத்தால் நன்கு புலப்படும். மகேந்திரவர்மன்காலத்துக்குமுந்தியே பல்லவர்கள் சோழர்நாட்டை யாக்கிரமித்துக்கொண்டார்களென்று நினைப்பதற்காதாரமிருக்கிறது. காவிரிப்பூம்பட்டினத்திற் பல்லவனீச்சரமென்னுஞ்சிவாலயம் மகேந்திரவர்மன்காலத்துக்குமுந்திப் பல்லவர்களாலமைக்கப்பட்டிருத்தல்வேண்டும். அதற்குத் திருஞானசம்பந்தமூர்த்தி நாயனர் பதிகமிருக்கிறது. மகேந்திரவர்மனுக்குக் குணபரனென்று ஒரு பெயருண்டு. அவன் சைவசமயத்தவனுனபிறகு திருவதிகையிற் குணபரவீச்சரமென்று தன்பெயரா லொருதளியமைத்தான். பின் வரும் பெரியபுராணச்செய்யுள்களால் மேற்கண்டவை விளங்கும். அவை,

"புல்லறிவிற்சமணர்க்காப்பொல்லாங்குபுரிந்தொழுகும்
பல்லவனுந்தன்னுடையபழவினைப்பாசம்பறிய
வல்லவொழிந்தங்கெய்தியாண்டவரசினைப்பணிந்து
வல்லமணர்தமைநீத்துமழவிடையோன்றாளடைந்தான்"

(திருநாவு-பு-செய். 45.)

"வீட்டியாச்சமணர்மொழிபொய்யென்றுமெய்யுணர்ந்த
காடவனுந்திருவதிகைநகரின்கட்கண்ணுதற்குப்
பாடலிபுத்திரத்திலமண்பள்ளியொடுபாழிகளுங்
கூடவிடித்துக்கொணர்ந்துகுணபரவீச்சரமெடுத்தான்" என்பன,

(திருநாவு-பு-செய். 46.)

மகேந்திரவர்மனுடையபிள்ளை வாதாபிகொண்டநரசிம்மவர்மன். அவன்காலத்தில் பல்லவவம்சம் அதிபுகழ்ந்தநிலையையடைந்திருந்தது.

நாகபட்டினத்திற் பல்லவர்கள் வசித்ததாகத்தெரிகிறது. இப்போது காடம்பாடியென்றுவழங்குகிற காடவர்கோன்பாடி யவர்களாலேற்படுத்தப்பட்டது. அவ்வூரி லவர்களரண்மனையின் அடையாளங்களை இன்றும் பார்க்கலாம். இவ்வாறு மூன்றும்நூற்றூண்டுமுதல் 7-ம்

நூற்றாண்டுவரை, பல்லவர்கள் முதலிற் சோழர்களுடையராஜ்யத்தின் வடபாகத்தையும், பின்னர்ப் பாடலீபுத்திரம், பல்லவனீச்சரம், நாகபட்டின மிவைகளிலடங்கிய தென்பாகத்தையும் நாளுக்குநா ளாக்கிரமித்துக்கொண்டுவந்தார்களென்று தெரிகிறது. நானிதுவரையிற் சொல்லியிருப்பவைகளால், 5-ம் நூற்றாண்டுக்கும் 7-ம் நூற்றாண்டுக்கு மிடையிலுள்ளகாலம் சோழர்கள் தங்கள் ஆற்றலையு நாட்டையு மிழந்திருந்த காலமென்றும், அவர்களுக்கில்லாதவாற்றலை யவர்களுக்குக்கற்பித்து அவரையஞ்சிச் சேரர் கருவூரைவிட்டுப்போனார்களென்று ஐயங்காரவர்கள் சொல்லுவது பொருத்தமுடையதல்லவென்றும் தெரிகிறது.

கி. பி. 9-ம் நூற்றாண்டில் விஜயாலயனென்னுஞ் சோழன் தஞ்சாவூரைத் தன் றலைநகரமாக்கிக்கொண்டானென்றும், அவனு மவனுக்குப் பின்வந்தவர்களுஞ் சோழர்களாட்சியைவிட்டு விலகியிருந்த நாடுகளையும் புதுநாடுகளையு மொவ்வொன்றாகப்பிடித்துச் சேர்த்துக்கொண்டு வந்தார்களென்றுந் தெரிகிறது. ஐயங்காரவர்கள் சொல்லுகிறகாலத்திற் சோழர்களுக் காற்றலிருந்திருக்கும்பக்ஷத்தில் விஜயாலயன்முதலியவர்கள் ஒருகாலத்திற் சோழரரசாட்சிக்குட்பட்டிருந்தநாடுகளை மறுபடியும் ஜயித்துச் சேர்த்துக்கொள்ளும்படி நேரிட்டிருக்காது.

சங்ககாலத்தே சேரர் ஆநிலைக்கருவூரி லரசாட்சிசெய்துகொண்டிருந்தார்களென்னும் ஐயங்காரவர்களது கொள்கை, சங்ககாலத்து நூல்களாகிய சிலப்பதிகாரம், மணிமேகலையா லாதரிக்கப்படுவதாக அவர்கள் சொல்லுகிறார்கள். சிலப்பதிகாரத்தையெடுத்துக்கொண்டு முதலி லதனுரையாசிரியர்களும் நூலாசிரியரும் இதுசம்பந்தமாய்ச் சொல்வதையும், பின்னர் மணிமேகலையையெடுத்துக்கொண்டு அதனுரையாசிரியரும் நூலாசிரியரும் இதுசம்பந்தமாய்ச் சொல்வதையும் முறையே விசாரிப்போம். சிலப்பதிகாரப்பதிகத்தின் 3-வது வரியாகிய,

"குன்றக்குறவரொருங்குடன்கூடி"

என்பதனுரையில் அடியார்க்குநல்லார் பின்கண்டவாறுஎழுதியிருக்கின்றனர். "குன்றம் கொடுங்கோளூருக்கயலதாகிய செங்குன்றென்னுமலை; அது திருச்செங்கோடென்பவாலெனின் அவரறியார்; என்னை? அத்திருச்செங்கோடு வஞ்சிநகர்க்கு வடகீழ்த்திசைக்கண்ணதா யறுபதின் காதவாறுண்டாகலானும், அரசனு முரிமையு மலைகாண்குவமென்று வந்து கண்டவன்றே வஞ்சிபுகுதலானு மதுகூடாமையினென்க"

கொடுங்கோளூர், வஞ்சியென்னு மிரண்டுமொழிகளையும் இவ்விடத்துப் பரியாயநாமங்களாக அடியார்க்குநல்லா ருபயோகப்படுத்தியிருக்கிறு ரென்பது தெளிவாய்க் காணப்படுகிறது. திருச்செங்கோடென்று அடியார்க்குநல்லார் குறிப்பிடுவது சங்கரிதுர்க்கம் ரெயில்வேஸ்டேஷனுக்கு 7-மைல்தூரத்திற் சேலம்ஜில்லாவில் அர்த்தநாரீசுரர் எழுந்தருளியிருக்குங் கொடிமாடச்செங்குன்றூரென்னுஞ் சிவஸ்தலம். திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்பதிக மதற்குளது. அது ஆனிலைக்கருவூருக்கு வடமேற்குத்திசையிற் சுமார் 40-மைல் தூரத்திலுள்ளது. வஞ்சிக்கு “வடகீழ்த்திசைக்கண்ணதா யறுபதின்காதவாறுண்டாகலா”னென்னுமிடத்து வஞ்சியைக் கொடுங்கோளூராய்க்கொண்டாற் பொருந்துமே தவிர ஆனிலைக்கருவூரென்றுகொள்வது பொருந்தாது. அடியார்க்குநல்லார் கொடுங்கோளூரையே வஞ்சியென்றுகொண்டாரென்பது ஐயங்காரவர்களுக்கு நன்றாய்த்தெரியும்.

அரும்பதவுரையாசிரியரும் கொடுங்கோளூரையே வஞ்சியென்று கொண்டாரென்பது திண்ணம், ஐயங்காரவர்களைப்போல் அரசவனத்தை யாடகமாடமென்றது ஆடகமாடம் திருவநந்தபுரமென்று கொண்டதும், கால்கோட்காதையில் “வெண்டலைப்புணரியின் விளிம்புசூழ்போத” என்னும்வரிக்கு ஐயங்காரவர்கள் கொள்கைக்குவிரோதமாய் அவர் செய்திருக்குமுரையுமே சான்றும். இவற்றைப் பின்னர் விரித்துச்சொல்லவேண்டியவிடத்தி லப்படிச்செய்வேன். இதனாற் சிலப்பதிகார வுரையாசிரியர்களிருவரும் ஐயங்காரவர்களோடு மாறுபட்டுக் கொடுங்கோளூரையே வஞ்சியெனக்கொண்டார்களென விளங்கும்.

இனிச் சிலப்பதிகாரநூலாசிரியராகிய இளங்கோவடிகள் சொல்வதைக் கவனிப்போம். மதுரையழற்பட்டதற்குப்பிறகு கண்ணகி யதைவிட்டுநீங்கி மேற்றிசைவாயில்வழியேசென்று வையையொருகரைக்கொண்டு நெடுவேள்குன்ற மடிவைத்தேறி வேங்கையின்கீழ் நின்றனளென்றும், பிறகு வானவூர்தியேறிச்சென்றனளென்றும் கட்டுரைகாதையிற் கூறியிருக்கின்றது. நடந்தகதையைக் குன்றக்குறவர், மலைவளங்காணவந்த சேரர்பெருமானுக்குத்தெரிவிக்க அப்போது அரசனுடன்கூடவிருந்த சாத்தனார் சேரர்பெருமானைநோக்கி வேந்தே நிகழ்ந்தகதையானறிவேன் சொல்லுகிறேனென்று ஆரம்பித்து நடந்த

செய்திகளைச் சொல்லிப் பின் "பாண்டியனது கொடுங்கோன்மை யித் தன்மைத்தென்பதைப் பெரும்வேந்தனாகிய உன்னிடத்துக் கூறவந்த வள்போலத் தனக்குரிய சோணாடுசெல்லாது நின்னாடு அடைவாளாயி னள் அங்நங்கை" யென்று முடித்தனர். 25-வது காட்சிக்காதை (87-90 அடிகள்). அவை

கொற்றவேந்தன்கொடுங்கோற்றன்மை
யிற்றெனக்காட்டியிறைக்குரைப்பனள்போற்
றன்னாட்டாங்கட்டனிமையிற்செல்லா
ணின்னாட்டகவயினடைந்தனணங்கை என்பன.

ஒருவனைப்பார்க்கச்செல்வோ ரவனதுறைவிடநோக்கிச் செல்லுத லியற்கை. சேரர்பெருமானதுறைவிடம் மலைநாட்டின்கண்ணதாயிருந் தாலொழிய மதுரையிலிருந்து அவரைத் தேடிச்செல்பவர் வையைக் கரைவழியே மேற்கேசென்று செங்குன்றேறி மலைநாடடைவது எற் றுக்கு? ஆனிலைக்கருவூர் அவனதுறைவிடமாயிருந்தால் அவனைத் தேடிச்செல்பவர் மதுரையிலிருந்து வடக்குநோக்கிச்சென்றிருத்தல் வேண்டும். சாத்தனாருக்குச் சேரனது தலைநகரின்னதெனத்தெரியா தென்று நினைப்பதற்கிடமில்லை. செங்குட்டுவனால் தனது புலவராகத் தெரிந்தெடுக்கப்பட்டவர். அவனால் மிகவுமாதரிக்கப்பட்டவர். ஆராயு மிடத்துச் சேரனதுறைவிடம் மலைநாட்டின்கண்ணேதான் இருந்த தென்று கொள்வதொன்றே பொருத்தமுடையதாகக்காணப்படுகிறது. மதுரையிலிருந்து மேற்கேபோகப்போகக் கருவூருக்குத் தூரமதிகமா கும்.

மேலும் விளையாட்டுவிரும்பிப் பைந்தொடியாயமொடு மலைவளங் காணச்சென்ற வரசன் கொடுங்கோளூரிலிருந்து சமீபத்திலுள்ள செங் குன்றுமலைப்பக்கஞ்சென்றானென்பது பொருந்துமேதவிர, ஆனிலைக் கருவூரிலிருந்து பிறர்நாட்டையும் யானை புலி கரடி வேங்கைமுதலிய வைகள் வசிக்கும் மலைகளையுங் காடுகளையுங் கடந்து முந்நூறுமைல் தூரஞ்சென்றானென்பது பொருந்தாது. மெல்லியசரீரமுடைய ராஜ ஸ்திரீகளையழைத்துக்கொண்டு வேட்டையாடுநோக்கமுடையவனைப் போற் சென்றானென்பது வியப்பைத்தருவதாம். சென்னபட்டினமுத லியநகரங்களில் வசிப்போர் வேண்டுங்கால் நகரப்புறத்துள்ள சிங்கார வனம், ஸ்தலமுதலியவைகளுக்குத் தங்குடும்பத்தோடுசென்று நாளை

ஆநந்தமாய்ச்செலவழித்து அந்தியிற் றன்னகர்திரும்புவதுபோல விளையாட்டைவிரும்பியவரசன் அந்தியில் தன்னரண்மனைதிரும்புந்தூரஞ் சென்றிருப்பானென்றுகொள்வதே பொருந்தும். அந்தப்புரத்து ஸ்திரீகளுடன் சென்றதனால் யானை புலி கரடிமுதலிய துஷ்டமிருகங்கள்வசிக்கும் மலையிலுங் காட்டிலும் இரவுதங்கும்படி பலநாட்பிரயாணதூரமுள்ள ஓர் மலைக்குச்சென்றானென்பது பொருந்தாது.

மலைவளமில்லாத கருவூரிலுள்ளோர் மலைவளங்காணச்செல்வதியற்கை. மலைநாட்டில்வசிப்போர் அவ்வாறுசென்றாலது வியக்கத்தக்கதென்று ஐயங்காரவர்கள் சொல்லுகிறார்கள். கொடுங்கோளூர் மலைநாட்டுள்ளதென்றால் அடர்ந்தகாடுகளால் மூடப்பட்ட மலையின் பேரில் அந்நகரங் கட்டப்பட்டிருக்கிறதென்பதா வதற்கர்த்தம்? அல்லது கொடுங்கோளூரில் அரசனரண்மனைக்குள் காடடர்ந்த மலைபுகுந்துகொண்டிருக்கிறதென்றுசொன்னதா யர்த்தம்பண்ணலாமா? மற்ற நகரங்களைப்போன்றதுதான் கொடுங்கோளூரும். ஆனால் மலைகளைச் சிறிதுதூரத்தில் உடையதென்று கொள்ளவேண்டும். மலைவீழருவியையுஞ் சொச்சந்தமாய்க் காட்டிற்சஞ்சரிக்கும் மான் மயில்முதலியவைகளையும் யாதொருநிர்ப்பந்தமுமின்றி மனோபீஷ்டப்படி பாடும்பக்ஷிகளையும் அரண்மனைக்குட் பார்க்கலாமா? மலையிலுள்ள விநோதங்க ளளவிலடங்குமா? சென்னபட்டினத்தில்வசிப்போர் கடற்கரைவாசியாயிருந்துங் காற்றுக்காகப்போவாரன்றியே வேடிக்கைபார்க்கக் கடற்கரைக்குச் சாயங்காலந்தோறுஞ்செல்பவர் எத்தனைபேர்! ஐயங்காரவர்களுக்கிந்தவிஷயத்திற் சந்தேகமுண்டாகலாமா?

ஆநிலைக்கருவூரிலிருந்து மலைவளம்பார்க்கக்கருதினால் சமீபத்திலுள்ள உந்நதமானது மழகியதுஞ் சகலவளங்களிலுஞ் சிறந்ததுமான நீலகிரிமுதலிய மலைகளைவிட்டு அதிதூரத்திலுள்ளது மிவைகளுக்கு எவ்வகையிலுந் தாழ்ந்ததுமான செங்குன்றுக்குச்செல்வானேன்? சேரர்களுக்குச் செங்குன்றைத்தவிரச் சிறந்தமலைக ளெத்தனையோவுள்ளன.

மேலும் மலைவளங்காணச்சென்றிருந்தபோது குன்றக்குறவர்களுஞ் சாத்தனாருஞ்சொல்லிய கதைகளைக்கேட்டவேண்மாள்

"நம்மகனுடைடைந்தவிப்
பத்தினிக்கடவுளைப்பரசல்வேண்டும்". சிலப்-காட்சி-(13-14 அடிகள்)

கண்ணகிக்கடவுளுக்குச் செங்குன்றிற்கோயில்சமைக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டது, தான் வசிக்குமிடத்திற்குச்சமீபத்திலுள்ள குன்றாயிருக்கவேண்டுமோகையால் முந்நூறுமைல்தூரத்திற் கட்டவேண்டுமென்று நினைப்பதற்கிடமில்லை.

மேலும், கண்ணகிக்கடவுளையெழுதக் கற்கொண்டுவர இமயநோக்கிச் செங்குட்டுவன் றன் றலைமைநகரைவிட்டுப் புறப்பட்டபோது எவ்வாறுசென்றனனென்றுபார்ப்போம். சேனை, சேனைத்தலைவர்களோடுஞ் சென்று முதலில் நீலகிரியிற்றங்கினான். சிலமுனிவரங்குவந்து அவனை வாழ்த்திச்சென்றனர். பிறகு கொங்கணக்கூத்தருங் கருநாடருந் தங்கள் மகளிருடன்வந்து வரிப்பாட்டுக்களைப் பாடினர். பிறகு குடகர் தங்கள்மகளிருட னரசனிடம்வந்தனர். பிறகு ஓவரென்னுஞ்சாதியார் வந்து அரசனை வாழ்த்தினர் என்றுசொல்லியிருக்கிறது. ஆநிலைக்கருவூரிலிருந்து புறப்பட்டிருந்தால் இமயநோக்கிச்செல்பவர் நீலகிரிக்குப் போகவும் பிறகு மேற்குக்கடற்கரையில் வசிப்பவராகிய கொங்கணரும் மைசூர்த் தென்பக்கத்தில் வசிப்பவராகிய கருநாடரும் வந்துசேரவும் பின்னர் ஸஹியபர்வதவாசிகளாகிய குடகர் வந்துசேரவு மெவ்வாறு கூடும். சிறிதுமொவ்வாததே. கொடுங்கோளூரிலிருந்து புறப்பட்டிருந்தால் ஸகலமும் பொருத்தமாயிருக்கிறது. கால்கோட்காதையைப் பார்க்க.

வஞ்சியைவிட்டுச் செங்குட்டுவன் புறப்படும்போது ஆடகமாடத்திலிருந்து பத்மநாபனது பிரசாதம்வந்ததென்று சொல்லியிருக்கிறது. பத்மநாபனைச்சொல்லும்போது "ஆடகமாடத்தறிதுயிலமர்ந்தோன்" என்றும் "ஆடகமாடத்தரவணைக்கிடந்தோன்" என்றும் இளங்கோவடிகள் அருமையானதமிழிற் சொல்வது பிரஸித்திபெற்றதும், நம்மாழ்வாரால் பாடப்பெற்ற திருப்பதிகளிலொன்றாகியதும், மலைநாட்டுள்ளதுமான திருவநந்தபுரத்துப்பெருமானையா? ஐயங்காரவர்கள்சொல்லும் வரையிற் கேட்டறியாத அரசவனத்துப்பெருமானையா? அநந்தசயனம் என்னும் நாமம் சேஷனால்வந்தது எந்தத் திருப்பதிக்கு? அது,

"இன்றுபோய்ப்புகுதிராகிலெழுமையுமேதஞ்சாரக்
குன்றுநேர்மாடமாடேகுருந்துசேர்செருந்திபுன்னை
மன்றலர்பொழிலநந்தபுரநகர்மாயனுமம்
ஒன்றுமோராயிரமாமுள்ளுவார்க்கும்பருரே".

என்று, நம்மாழ்வாரால் புகழப்பெற்றதன்றோ. பக்கத்திலிருக்கிற அரசவனத்திலிருந்து திருமால்பிரசாதம் வந்திருந்தால் ஊர்ப்பேரைச் சொல்லி யிவ்விடத்திலிருந்துவந்ததென்று சொல்லவேண்டியதில்லையே சிவபெருமானது பிரசாத மின்னவூரிலிருந்துவந்ததென்று சொல்லாதது கவனிக்கத்தக்கது.

ஐயங்காரவர்கள் பின்கண்டநியாயத்தையுஞ் சொல்லுகிறார்கள். அதாவது "செங்குட்டுவன் ஒரேயிரவிற் சித்தஞ்செய்து வடநாட்டிற் குப்பிரயாணித்த அவசரதருணத்தில் ஆடகமாடத்துத் திருமாலின் கோயிற் பிரசாதத்துடன் சிலர்வந்து அவனைக்கண்டனரென்று அடிகள் கூறுவதை நோக்குமிடத்து அக்கோயில் வஞ்சியாகிய கருவூர்ப்பக்கத் திருந்ததேயாம்" என்பது. செங்குட்டுவன் மலைவளங்காணச்சென் றிருந்த செங்குன்றிலேயே வில்லவன்கோதை, யழும்பில்வேளிவர்கள் சொல்வதையுங்கேட்டு வடநாட்டியாத்திரைசெய்யத் தீர்மானித்துவிட் டனனென்றும், அழும்பில்வேளின் யோசனைப்படி அதைப்பற்றி யூரெங்கும் பறையறையப்பட்டதென்றும், யாத்திரைக்குச்சித்தமா யிருந்த செங்குட்டுவன் ஆரியமன்னர்மேல் வஞ்சினங்கூறினனென்றும், அப்போது அங்கிருந்த சோதிடம்வல்லான் அரசே நீகருதிய வடதிசை யாத்திரைக்கு இப்பொழுதே யெழுதல் சிறந்தது என்று சொன்ன னென்றும், செங்குட்டுவன் மகிழ்வுற்றுத் தன்வாளினையுங் குடையை யும் நன்முகூர்த்தத்தில் வடதிசைப்பெயர்த்துக்கொள்ளும்படி கட்டளை யிட்டனனென்றும் காட்சிக்காதை, கால்கோட்காதைகளாலறியலாம்.

> "முழுத்தமீங்கிதுமுன்னியதிசைமே
> லெழுச்சிப்பாலையேகென்றேத்த
> மீளாவென்றிவேந்தன்கேட்டு
> வாளுங்குடையும்வடதிசைப்பெயர்க்கென" சிலப். கால்கோட்காதை-
> (30-முதல் 33-வரை அடிகள்).

இவ்விடத்து முன்னியதிசைமேலென்பது செங்குட்டுவன் ஏற்கனவே வடதிசையாத்திரைக்குச் சித்தமாயிருந்தானென்றும் "வாளுங்குடை யும் வடதிசைப்பெயர்க்க"வென்றதனால் நன்முகூர்த்தத்திற் பரஸ்தலப் பட்டிருந்தானென்றுந் தெரிகிறது. அவசரதருணத்தில் ஒரேயிரவிற் சித்தஞ்செய்தானென்று ஐயங்காரவர்கள் சொல்லுவதற்கிடமில்லை.

வஞ்சி கடற்கண்ணதோர் நகரமாயிருந்தா லதைச் சிலப்பதிகார முதலிய நூல்களி லெங்கேயாவது நூலாசிரியர்கள் காட்டியிருக்கமாட்டார்களா? அங்ஙனங் கடற்கரைச்சம்பந்தம் வஞ்சிக்குக் கொஞ்சமுமில்லாமையே அஃது உள்நாட்டுநகரமென்பதை விசதமாக்கவல்லதென்பது ஐயங்காரவர்கள் வாதங்களிலொன்று. சிலப்பதிகாரம் காட்சிக் காதையில்

> "அளந்துகடையறியாவருங்கலஞ்சுமந்து
> வளந்தலைமயங்கியவஞ்சிமுற்றத்து" சிலப்-காட்சி (33, 34 அடிகள்).

என்னுமடிகளிற்கண்ட கலமென்னும்பதத்திற்கு ஆபரணமென்று பொருள்கொள்வார் சிலர். கலமென்பது இவ்விடத்து நாவாயையே யுணர்த்துமென்பது பலர் கொள்கை. மேற்கண்டஅடிகள் அளந்து கடையறியாவளம் அதாவது பலபண்டம் நாவாய்சுமந்துவந்து தலைமயங்கிய வஞ்சிமுற்றத்து என்று பொருள்படும். சிலர் சொல்வது போலச் சுமந்துவந்தது ஆபரணமானால் தலைமயங்கியது மாபரணமாயிருத்தல்வேண்டும். தலைமயங்கியது பலபண்டமென்று சொல்லப்பட்டிருக்கிறது. அப்பொழுது சுமந்துவந்ததும் பலபண்டமாகவேயிருத்தல்வேண்டும். எது சுமந்துவரப்பட்டதோ அதற்கல்லவா தலைமயக்கஞ் சொல்லப்பட்டிருத்தல்வேண்டும். வளமென்பது பலபண்டமென்பதை யெந்தநிகண்டிலும் பார்க்கலாம். பலர்சொல்லுமர்த்தத்தை யொப்புக்கொண்டால் நாவாய்கடற்கரைச்சம்பந்தமுள்ள பட்டினத்திற்கல்லது வேறு எந்தவூருக்கு வளத்தைச்சுமந்துவரும். நிற்க, கால்கோட்காதையில்

> "தானவர்தம்மேற்றம்பதிநீங்கும்
> வானவன்போலவஞ்சிநீங்கித்
> தண்டத்தலைவருந்தலைத்தார்ச்சேனையும்
> வெண்டலைப்புணரியின்விளிம்புசூழ்போத" சிலப்-கால்கோட்காதை-
> (78-முதல் 81-வரை அடிகள்).

என்று சொல்லியிருக்கிறது. பின்னிரண்டடிகளுக்குத் தண்டத்தலைவருஞ்சேனையுங் கடற்கரைவரை பரவிநிற்கவென்றுபொருள்படும். இதற்கு அரும்பதவுரையாசிரியரும் "கடற்கரையே யொருகைபோத" வென்றுரைசெய்திருக்கிறார். கடற்கரைப்பட்டினமாகிய வஞ்சியினிடத்துச் சேனைபரவிநின்றபோது அதற்கு மூன்றுபக்கமெல்லை நிலமாகவும் ஒருபக்கமெல்லை கடலாகவுமிருந்ததென்று தெள்ளிவாயேற்படுகிறது.

ஐயங்காரவர்கள் "அச்சேனையின் பரப்புமிகுதியை வருணித்த படியே யன்றிப்பிறிதன்று. வஞ்சி கடற்கரைக்கண்ணதாயின் தானைகளின்பெருக்கைக்கூறவந்தவவ்விடத்தேயவை கடற்கரைவிளிம்புவரையிற் சென்றனவென்று அடிகள் கூறுவதிற் பெருமையும் வியப்புமில்லை" யென்று சொல்லுகின்றனர். ஆநிலைக்கருவூரிற் றண்டத்தலைவரும் சேனையுந்திரண்டிருந்தால் "வெண்டலைப்புணரியின்விளிம்புசூழ்போத" என்பதற்குக் கிழக்குத்தெற்குமேற்கு இம்மூன்றுபக்கத்திலுங் கடற்கரைவரையிற் சேனைபரவிநின்றதென்றர்த்தமா? அல்லது வடக்கையுஞ் சேர்த்து நாலுதிக்கிலுங்கடற்கரைவரையிற் பரவிநின்றதென்றர்த்தங் கொள்ளுகிறதா? பிந்தியதானாற் சேனைக்குப்போவதற்கிடமில்லை. முந்தியதானாற் கிழக்கே சோணாட்டிலுந் தெற்கே பாண்டிநாட்டிலும் மேற்கே கொங்குநாடு மலைநாடுகளிலுஞ் சேனைபரவிநின்றதென்றாகும். இப்படிப்பட்ட அதிசயோக்தியை யிளங்கோவடிகள்மேலேற்றுவது தகுதியன்றே. மேலும், கட்டுரைகாதையிற் பராசரனென்போன் சோணாட்டிலிருந்து சேரனிடத்துப் பரிசுபெறச்சென்றனனென்று சொல்லியிருக்கிறது. அவன் சென்றவழி யின்னதென்று பின்கண்டவரிகளாற்றெரியும். அவை,

"காடுநாடுமூரும்போகி
நீடுநிலைமலயம்பிற்படச்சென்றாங்கு" என்பன. சிலப்-கட்டுரை-(65, 66 அடிகள்).

ஆநிலைக்கருவூருக் கவன்போவதாயிருந்தாற் காடும் நீடுநிலைமலயமும் பிற்படச் சென்றானென்று சொல்வதுபொருந்தாது. பரிசுபெற்றுத் திரும்பும்போது பாண்டியநாட்டிலுள்ள தங்கால் என்னுமூரிற் றங்கினானென்று சொல்லியிருக்கிறது. அது வருமாறு:—

"செங்கோற்றென்னன் றிருந்துதொழின் மறையவர்
தங்காலென்பதூரேயவ்வூர்ப்
பாசிலைபொதுளியபோதிமன்றத்துத்
தண்டேகுண்டிகைவெண்குடைகாட்டம்
பண்டச்சிறுபொதிபாதக்காப்பொடு
களைந்தனனிருப்போன்" என்பதாம். சிலப்-கட்டுரை-(74-முதல் 79-வரை அடிகள்). இதனால்,

ஆநிலைக்கருவூரிலிருந்து சோணாட்டில் தன்னூருக்குத் திரும்பும் பராசரனுக்குப் பாண்டிநாடு இடையிலிருந்ததென்று சொல்வதுபொருந்தாது.

நான் மேற்சொல்லியவைகளாற் சிலப்பதிகார வுரையாசிரியர்களிரு வரும் நூலாசிரியரும் மலைநாட்டுநகரையே வஞ்சியென்று கொண் டார்களென்பது நன்குபுலப்படும்.

இனி, மணிமேகலையுரையாசிரியரும் நூலாசிரியருஞ் சொல் வதைக்கவனிப்போம். மணிமேகலைக்குப் பழையவுரையில்லை. இக் காலத்துப் பேராசிரியராகிய மகாமகோபாத்தியாய சாமிநாதையரவர் கள் அதற்கருமையான வுரையொன்று செய்திருக்கிறார்கள். அவர்கள் மணிமேகலை யபிதானவிளக்கத்தில் "வஞ்சி-சேரர்களுடையராஜதானி-கருவூரெனவுங்கூறப்படு" மென்றும் கந்திற்பாவைவருவதுரைத்த காதையுரையில் "அது மலைநாட்டிலுள்ள" தென்றும் எழுதியிருப்ப தோடு சிலப்பதிகாரவபிதானவிளக்கத்தில் "வஞ்சி-சேரர்களுடையராஜ தானி. இதைக் கொடுங்கோளூரென்பர் சிலர். திருவஞ்சைக்கள மென்பார் சிலரென்றும் "செங்குன்று-கொடுங்கோளூருக்கயலதாகிய வொருமலை"யென்றும் எழுதியுள்ளார்கள். கருவூரென்பது கொங்கு நாட்டுக்கருவூரன்று என்று பலவிடங்களில் எழுதியிருக்கிறார்கள்.

வஞ்சிமரம்நிறைந்தகாட்டைக்கொண்டு நகரத்திற்கு வஞ்சி யென்னும் பெயர்வாய்ந்ததென்றுகொள்ளும் ஐயங்காரவர்களுக்கு மாறாய் "கொடிப்படூஉம்பொன்னகர்" என்று சொல்லியதொன்றைக் கொண்டே மணிமேகலைநூலாசிரியர் கொடுங்கோளூரைவஞ்சியென்று கொண்டாரென்று தெரிகிறது. சிலப்பதிகார, மணிமேகலையுரையா சிரியர்கள் நூலாசிரியர்கள் ஒவ்வொருவரும் வஞ்சி மலைநாட்டுநகர மென்றே கொண்டனரென்றேற்படுகிறது.

ஐயங்காரவர்கள் அடியிற்கண்ட செய்யுள்களைத் தனக்காதார மாகக்காட்டுகின்றனர். அவை,

.........................நெடுந்தேர்க்கோதை
திருமாவியனகர்க்கருவூர்முன்றுறைத்
தெண்ணீருயர்கரைக்குவைஇய
தண்ணான்பொருநைமணலினும்பலவே. (நக்கீரர் அக. நா. 93.)

தண்பொருநைப்புனற்பாயும்
விண்பொருபுகழ்விறல்வஞ்சி (புற. நா. 11.)

தண்பொருநைசூழ்தரும்வஞ்சியர்கோமான் என்பன. (சில. 29.)

இச்செய்யுள்களிலுள்ள கருவூர் பொருநையென்னுமிரண்டுபெயர்களும் ஆநிலைக்கருவூர், ஆம்பிராவதிநதி யென்னுமிரண்டையு முறையே குறிக்குமென்பது அவர்கள்கொள்கை. கொடுங்கோளூரையும் பேர் யாற்றையு முறையேகுறிக்குமென்பது எனதுகொள்கை. கொடுங் கோளூராய வஞ்சிக்குக் கருவூரென்றும் பெயருண்டென்று ஏற்கனவே காட்டியிருக்கிறேன். பொருநையென்பது ஆம்பிராவதியன்று; பேர் யாறே யென்று பிந்திக்காட்டுகிறேன். அப்போது இச்செய்யுள்கள் நான் சொல்வதற்காதாரமாகுமேதவிர ஐயங்காரவர்கள் வாதத்திற் காதாரமாகாது.

ஐயங்காரவர்கள் பதிற்றுப்பத்திலிருந்து அடியிற்கண்ட பாடலைத் தனக்காதாரமாகக் காட்டுகிறார்கள்.

"செங்குணக்கொழுகுங்கலுழிமலிர்நிறைக்
காவிரியன்றியும்பூவிரிபுனலொரு
மூன்றுடன்கூடியகூடலனையை" (பரணர். பதிற்று. 50.) இது,

இவ்வாறு தமக்காதாரமாகுமென்று அவர்கள் காட்டவில்லை. எதற்காக மேற்கோளாக விச்செய்யுளைக்காட்டியிருக்கிறார்களோவதையவர்களே சொல்லியிருந்தால் நலமாயிருக்கும். காவிரியையும் காவிரி முக்கூடலை யுஞ் செங்குட்டுவனுக்குபமானமாகப் பரணர்சொல்லியிருப்பதைக் கொண்டு அவ்விரண்டுஞ் சேரனுக்குரியவைகளென்றும் அப்படியானு லருகிலுள்ள கருவூருமவனுக்குரியதேயாமென்று மவர்கள்கருத்தென்று தோன்றுகிறது. மேலேகண்ட அகநானூற்றுச்செய்யுளிற் பொருநை யைச் செங்குட்டுவனதாய் நக்கீரர் சொல்லியிருக்க, பரணர் பதிற்றுப் பத்துச்செய்யுளிற் காவிரியை யவனதென்று சொல்வதற்கு ஒரு காரணமிருக்கவேண்டும். நக்கீரரும் மற்றைக்கவிகளும் பொருநையைச் சேரனதென்றுங் காவிரியைச் சோழனதென்றுஞ் சொல்லுகிறார்களே தவிரக் காவிரியைச் சேரனதாகச் சொல்லக்காணோம். பரணர் மற்றைக்கவிகளினின்று மாறி இந்தச் சமயத்திலிப்படிச் சொல்வதற் குள்ள நியாயத்தை யாராய்வோம். மேற்கண்ட பதிற்றுப்பத்து 5-ம் பத்துப்பதிகத்திற் பின்கண்டவரிகள் காணப்படுகின்றன. அவை,

குஞ்சரவொழுகைபூட்டிவெந்திறல்
ஆராச்செருவிற்சோழர்குடிக்குரியோர்
ஒன்பதின்மர்வீழவாயிற்புறத்திறுத்து
நிலைச்செருவினாற்றலையறுத்துக்
கெடலருந்தானையொடு
கடல்பிறக்கோட்டியசெங்குட்டுவன். என்பன.

இவற்றால் நேரிவாயில் யுத்தத்திற் சோழர்குடிக்குரியோர் ஒன்பதின் மரைச் சேரன்செங்குட்டுவன் ஜயித்துச் சோணாடுங்காவிரியுமவன தென்று சொல்லக்கூடிய சமயத்திற் பரணர் இப்பாடலைப்பாடி யிருக்கவேண்டுமென்று தோன்றுகிறது. காட்சிக்காதையிற் பின்கண்ட வரிகளாற் சேரன்செங்குட்டுவன் கொங்கர் செருக்களத்துச் சோழ பாண்டியர்களின்மேல் வெற்றிகொண்டானென்று தெரிகிறது. அவை,

வில்லவன்கோதைவேந்தற்குரைக்கும்
நும்போல்வேந்தர்நும்மோடிகலிக்
கொங்கர்செங்களத்துக்கொடுவரிக்கயற்கொடி
பகைப்புறத்துத்தந்தனராயினுமாங்கவை
திசைமுகவேழத்தின்செவியகம்புக்கன. என்பன. சிலப்-காட்சி-(51-முதல் 54-வரை அடிகள்)

அவன் கண்ணகி கால்கோளுக்காக, இமயம்நோக்கிச்செல்லுமுன் வடதிசைவாழுமரசர்க்கெல்லாம் வில், கயல், புலி யிவற்றையடையாள மிட்ட உமது திருமுகத்தைமுன்னே விடுத்தருளல்வேண்டுமென வவன் சேனாபதியாகிய வில்லவன்கோதை யவனுக்குத் தெரிவித்துக்கொண் டானென்று அதேகாதையிற் சொல்லியிருக்கிறது. அதுவருமாறு:—

"வடதிசைமருங்கின்மன்னர்க்கெல்லாம்
செந்தமிழ்நன்னாட்டுச்செழுவிற்கயற்புலி
மண்டலையேற்றவரைகவீங்கென". என்பதாம். சிலப்-காட்சி (70-முதல் 73-வரை அடிகள்)

கயலும் புலியும் பாண்டியனுக்குஞ் சோழனுக்குமுரிய வடையாள மல்லவா? செங்குட்டுவனுக்கு அவனுக்குரிய வில்லோடு கயலையும் புலியையுஞ்சேர்த்தெழுதச்சொல்லியது அக்காலத்து அவன் சோழ பாண்டியர்களின்மேல் வெற்றிகொண்டிருந்தானென்று காட்டுகிறது. இவ்வாறு கவிகள்சொல்வது வழக்கமென்பதைப் பின்கண்டசெய்யுள்க ளால் அறியலாம். பெருஞ்சேரலிரும்பொறைமேல் அரிசில்கிழார் பாடியது

காவிரிமண்டியசேய்விரிவனப்பிற்
புகார்ச்செல்வபூழியர்மெய்ம்மறை (பதிற்றுப்பத்து 73.)

இதிற்காவிரிநதியையும் புகார்நகரத்தையுஞ்சேரனுக்குரியவாகச் சொல் லப்பட்டிருக்கிறது. பின்கண்டசெய்யுள் ஜயங்கொண்டார் குலோத் துங்கசோழன்மேற்பாடியது

பொன்னித்துறைவனைவாழ்த்தினவே
பொருநைக்கணவனைவாழ்த்தினவே
கன்னிக்கொழுநனைவாழ்த்தினவே
கங்கைமணாளனைவாழ்த்தினவே (கலிங்கத்துப்-செய்-120)

பொருநைக் கணவனென்றுங் கன்னிக்கொழுநனென்றுங் கங்கைமணாள னென்றும் இதிற் சோழனைச் சொல்லியிருக்கிறது. பொருநை சேரனது நதியென்றுங் கன்னி பாண்டியனதென்று மறியாதவர் யார்? ஓரரசன் மற்றோரரசன்மேல் வெற்றிகொண்ட சமயத்திலிப்படி வருணிக்கப்படுவதுவழக்கம்.

செங்குட்டுவன் சோழபாண்டியர்கண்மேல் வெற்றியடைந்திருந்த போதிலுமவர்கள் ராஜ்யத்தைத்தன்னதாக முற்றிலு நினைத்துவிடவில்லையென்றுதெரிகிறது. கண்ணகிக்கடவுளுக்குக்கல் இமயத்திலுங் கொள்ளலாமென்றும், நீர்ப்படைக்கங்கைப் பேர்யாற்றினுங் காவிரிப் புனலினுந்தகவுடைத்தென்றும் புலவர்கள் கூறியபோது அவர்கள் ஒரு பாகத்தைச்சினத்துடன்மறுத்து

பொதியிற்குன்றத்துக்கற்கால்கொண்டு
முதுநீர்க்காவிரிமுன்றுறைப்படுத்தல்
மறத்தகைநெடுவாளெங்குடிப்பிறந்தோர்க்குச்
சிறப்பொடுவரூஉஞ்செய்கையோவன்று சிலப்-காட்சி-(122 முதல் 125 வரை அடிகள்)

என்றனன். பாண்டியர்க்குரிய பொதியிற்குன்றத்துக்கற்கொண்டு சோழர்குலக்கொடியாகிய காவிரியில் நீர்ப்படைசெய்யச் செங்குட்டுவனெவ்வாறு ஒப்புவன். மேற்கண்டவற்றால் காவிரியையுங் காவிரிமுக் கூடலையுஞ் சேரனதாக எக்காலத்துஞ் சொல்லுதலேலாதென்றேறப்படும்.

கருவூர்த்தமிழ்த் தலபுராணத்துச்செய்யுள்களைத் தாம் சொல்லியதற்கு மேற்கோளாக ஐயங்காரவர்கள் பலவிடங்களிற் காட்டுகின்றனர். அப்புராணத்தைச் செய்தவர் ஊர், பெயர், காலமுதலியனவொன்றுந்தெரியவில்லை. அவர் தாம்செய்த தமிழ்ப்புராணத்துக்கு ஸம்ஸ்கிருதஸ்தலபுராணத்தை முழுவதுமாதாரமாகக்கொண்டு செய்தாரென்றுந்தெரியவில்லை. பூர்வாதாரங்களையொட்டியே இப்புராணத்தைச் செய்யவேண்டுமென்னுங் கருத்துடையவரென்றுந் தோன்றவில்லை. பிற்பட்டகாலத்திற் செய்யப்பட்டதாகத்தெரிகிறது. இது

நிற்க, 12 சுலோகங்கள்மட்டுமொரு ஸ்தலத்துக்கு ஸமஸ்கிருதபாஷை யிற் புராணமாகவேற்பட்டிருக்க அதைத் தமிழ்ப்படுத்தியவொருகவி மூவாயிரஞ்செய்யுள்களாற் செய்துமுடித்தார். அவர் நல்ல கவியென் பதிலுந் தமிழ்ப்புலவர்களால் அப்புராணமுயர்ந்ததாக மதிக்கப்பட்டு வருவதென்பதிலுமாக்ஷேபமில்லை. ஆனால், புராணத்திற்கண்ட செய்தி கள் எம்மட்டிற் பிரமாணமாகக் கொள்ளப்படலாமென்கிற விஷயத் தில் ஐயமுண்டாகிறது. இன்னும் பல ஸ்தலபுராணங்கள் அவ்வாறே செய்யப்பட்டுள்ளனவென்பது பலருமறிந்தவிஷயம். சில ஸ்தலங்களுக்கு ஸம்ஸ்கிருத ஸ்தலப்புராணமாவது தேவாரந்திருவாய்மொழிப்பதிகங்க ளாவதில்லாமலிருக்கத் தமிழிற் புராணஞ்செய்திருக்கிறார்கள். அவ் வகைப்புராணங்களுக்கு அவற்றைச்செய்தவர்களைத்தவிர வேறுதார மிருப்பதாகத் தெரியவில்லை. கருவூர் ஸ்தலப்புராணஞ்செய்தவர் சொல்வதை நாமெம்மட்டுமங்கீகரிக்கலாமென்று பார்ப்போம். வஞ்சு ளாடவியென்னுங்கருவூரையவர் சோழர்களது பழம்பதியென்று எறி பத்தச்சருக்கத்திற் சொல்லியிருப்பதை யேற்கனவே காட்டியிருக்கின் றேன். அவரே வராககிரிச்சருக்கத்திற் பின்கண்டவாறு சொல்லு கின்றனர்.

ஓதுதொல்பதியவற்றினுளுதியர்கோனாட்டின்
மீதுயர்ந்தவாம்பிரவதிநதிக்கரைமிசையிற்
றுதுபோதுமிழ்வஞ்சுளாடவியெனச்சாற்றும்
ஆதிமாபுரச்சிறப்பினையன்றுரைத்தனனால் (கருவூர்ப்புராணம்-வராக கிரிச்ச-செய்-18)

வஞ்சுளாடவியை உதியர்கோனாட்டிற்றொல்பதி யென்றுசொல்லுகிறார். நாடு உதியரதானால் அதிலுள்ள நகரஞ்சோழருக்குச் சொந்தமாயிருக் குமா? அதேசருக்கத்தில் மற்றோரிடத்தில் "தனிநெடுங்கவிகை நிழற்று சேரலர்கோன்றங்கிய கொங்குநன்னாடு" என்றுசொல்லுகிறார். ஆனாற் கருவூரைச்சேரரது ராஜதானியென்று ஓரிடத்திலும் அவர் சொல்ல வில்லை. இதுநிற்க, ஆம்பிராவதிநதிக்கு அந்தப்புராணத்தில் நாலுபெயர் களைக்காணலாம். அவையாவன (1) ஆம்பிராவதிநதி. (2) சூதநதி (3) அம்பாநதி (4) ஆன்பொருநை என்பன. இறுதியிலுள்ளபெயர் அந் நதிக்குவருவதற்குக்காரணம் அந்தப்புராணத்தில் ஆம்பிராவதிநதிச் சருக்கத்திற் பின்கண்டவாறு சொல்லப்பட்டிருக்கிறது.

"சொர்ப்பபுரியந்தனைபுரியக்கிளர்வான்சுரபிநெடுங்கைலை
வெற்பையொருவிவ்ராககிரிமேவிநதிதீரத்தலங்கள்
அற்பொடருச்சித்தாண்டாண்டுற்றரியதவங்களாற்றுதலாற்
பொற்புமலியாம்பிரவதியாம்பொருநையெனவும்புகலுவரால்"
(கருவூர்ப்புராணம்-ஆம்பிராவதிச்-செய். 7). என,

இந்நதிக் கிப்பெயருண்டென்றால் ஸம்ஸ்கிருத ஸ்தலப்புராணத்திலுமிப் பெயர் காணப்படவேண்டுமே. அதிலில்லையென்பது தெளிவு. இந்தத் தமிழ்ப்பெயருக்கு ஸம்ஸ்கிருதத்திலோர் பெயரேற்பட்டிருந்தாலது வென்ன? தமிழில் ஸ்தலப்புராணம்பண்ணுவோர் தங்களாலியன்றமட்டிற் கூட்டியும்பெருக்கியுங் கூறுவதுபோல இப்புராணஞ்செய்தவருந் தன்னாற் பாடப்பெற்ற தலந்தீர்த்தங்களைக் கடன்வாங்கியுயர்த்தியிருக்கிறாரேதவிர வேறில்லையென்பது நன்குபுலப்படும். ஆம்பிராவதிநதி சூதநதி, அம்பாநதியென்னும்பெயர்கள் பழையநூல்களுக்குச் சிறிதேனுந்தெரியுமா? பெயர்கள் நன்றாயிருக்கின்றனவே! ஸம்ஸ்கிருதப்பெயர்களிடத்திற் பழையநூலாசிரியர்களுக்குத்துவேஷமுண்டா?

பேர்யாறு, காஞ்சிநதி, பொருநை அல்லது ஆன்பொருநையென்னும்பலபெயர்களுடைய ஓர்யாறு சேரனதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. ஐயங்காரவர்கள் ஒவ்வொருபெயரு மொவ்வொருயாற்றைச் சுட்டுவதாகக்கருதிச் சேரனுக்கு மூன்றுயாறுகள் உளவெனத்தீர்மானித்தனர். பொருநையை ஆம்பிராவதிநதியெனக்கூறினர். ஆம்பிராவதி நதி கொங்கர்நாட்டிலுள்ள பன்றிமலையிலுற்பத்தியாகிச் சோழர்குலக் கொடியென்றுவழங்கும் காவிரிநதியிற் சங்கமமாகும் உபநதிகளிலொன்று. காஞ்சிநதியென்பதை நொய்யலெனக்கொண்டனர். அது கொங்கர்நாட்டு வெள்ளியங்கிரியிலுற்பத்தியாகிக் காவிரியிற் சங்கமமாகும் மற்றோருபநதி. ஐயங்காரவர்கள் "இவ்வாறு நொய்யல், காஞ்சிமாநதியென அப்பிரதேசத்தி லின்றும் வழங்கிவருகின்றதென்றனர். கீழ்க்குறிப்பில், "இந்நதி 108 மைல் நீளமுடையது. ஈரோடு கருவூர்த் தாலூகாக்கள் கூடுமிடத்து நெய்க்குப்பத்தருகில் காவிரியுடன் சங்கமமாகின்றது" என்றெழுதியிருக்கின்றனர். நொய்யலுக்குங்காஞ்சியென்றொருபெயரிருக்கலாம். சேரனது காஞ்சிமாநதி யெதுவென்றுபார்க்க வேண்டாமா? வெள்ளாறென்றெத்தனையாறுள்ளன? பெண்ணையாறென்றெத்தனையாறுள்ளன? பெயரொற்றுமையைக்கொண்டுமட்டும் மயங்கலாமா? சேரனது காஞ்சியின்னதென நாமறியுமாறு ஐயங்காரவர்களே பின்கண்டவரியை மேற்கோளாகக் காட்டியிருக்கிறார்கள்.

காஞ்சியம்பெருந்துறைமணலினும்பலவே. (பதிற்றுப்பத்து செய்-48.)

அதேபதிற்றுப்பத்துப்பாடலிற் காஞ்சிநதிக்குவிசேஷணமாக நாலு வரிக்குமுன்னுள்ளதைக் கவனித்திருந்தாலிவ்வாறு அவர்கள் சொல்லும்படி நேரிட்டிருக்காது. "நின்மலைப்பிறந்துநின்கடன்மண்டும்" என்று பரணர் அந்நதிக்கு விசேடணம் கொடுத்திருக்கிறார். ஸஹ்ய பர்வதத்திற்பிறந்து மேல்கடலிற் சங்கமமாகுங் காஞ்சிநதியல்லவா சேரனது. கொங்கர்நாட்டு வெள்ளியங்கிரியிற்பிறந்து சோழர்காவிரியில் விழும் நொய்யலென்னுமுபநதியையா பரணர் பெருமையாகச் சேரர் நதியென்றது.

நின்மலைப்பிறந்துநின்கடன்மண்டும்
மலிபுனனிகழ்தருந்தீநீர்விழவிற்
பொழில்வதிவேனிற்பேரெழில்வாழ்க்கை
மேவருசுற்றமோடுண்டினிதுநுகருந்
தீம்புனலாயமாடுங்
காஞ்சியம்பெருந்துறைமணலினும்பலவே. (பதிற்றுப்பத்து-செய். 48).

சோழபாண்டியர்கள் நதிகளென்றுசொல்லுங் காவிரியும்வையையும் பிறர்மலைப்பிறந்து அவர்கடன்மண்டுநதிகளேயன்றி அவர் மலைப்பிறந்து அவர்கடன்மண்டும் இலக்கணமுடையவையல்ல. சேரனதுநதிக்கு மற்றவரசர்கள்நதிக்கு அமையாத சிறந்த இலக்கணமமைந்திருப்பதைப் பரணர் மேற்கண்டபாடலிலெடுத்துக்காட்டுகின்றார். அதைப் பிறர் மலைப்பிறந்து பிறர்நதிமண்டும் நொய்யலென்னுஞ் சிற்றாறென்றல் எவ்வாறுபொருந்தும். பரணர் சொல்லியிருக்கும் யாறு மலைநாட்டிலுள்ளதாயும் மேற்குநோக்கிச்செல்வதாயுமிருத்தல்வேண்டும். நொய்யலுக்கு அந்தவிலக்கணம் ஒருசிறிதும்பொருந்தாது.

மேலும், பரணர் காஞ்சியைப்பற்றிச் சொல்லும்போது அந்நாட்டில் உள்ளசெல்வர் வேனிற்காலத்துத் தம்மனையில்வைகாது அக்காலத்துமலிபுனனிகழ்தரு காஞ்சித்தீநீரைவிரும்பிச் சுற்றமோடு காஞ்சிக்கரைப்பொழில்களில் வைகுதலையுடையாரென்று சொல்லுகிறார். ஆல்வாயென்றிப்போதுவழங்குகிற பேர்யாற்றில் இப்பொழுது மிது நடந்துவருகிறது. அவ்வியாறு கொச்சி, திருவநந்தபுரம் ராஜ்யங்களுக்கிடையில் மேற்குநோக்கிச்செல்லுகின்றது. அந்தவிரண்டுசமஸ்தானத்து அரசர்களும் செல்வர்களும் கோடையில் அவ்வியாற்றில் நீராடும்பொருட்டுத் தங்குவதற்காக யாற்றினிருகரையிலு மமைத்த பல

கட்டடங்களுள்ளன. சென்னபட்டினமுதலியவிடங்களிலிருந்து செல்வர்கள் கோடைகாலத்தில் அவ்வியாற்றில் நிறையச்செல்லுநீரைவிரும்பிச்செல்வதுண்டு. பலமணிநேரம் அவ்வியாற்றில் நீராடுவது தேகத்துக்கு அதிக சுகத்தைச்செய்யுமென்னும் பிரசித்தியுண்டு. கோடையில் மேற்கண்டபடி நொய்யற்கரைக்குப் போவதாயாரும் எப்போதுஞ் சொல்லக்கேட்டதில்லை. மழைகாலத்திலேயே அதி லதிகஜலங்கிடையாது. அவ்வியாற்றை நேரேபார்த்தால் ஒருவாய்க்கால்போலக் காணப்படும்.

காஞ்சியென்னும் பெயருள்ளநதி மலைநாட்டிலிப்பொழுது எவ்விடத்திலாவது இருப்பதாய்த்தெரியவில்லை. மலைநாட்டில் முற்காலத்து வழங்கிய தமிழ்ப்பாஷைமாறி மலையாளபாஷையா யிப்பொழுதுவழங்குகிறது. பேர்கள் அநேகம் மாறியு மறைந்தும்போய்விட்டன. பேர்யாறு ஆலவாயென்னும்பெயரால் (அகல+வாய்) அழைக்கப்படுகிறது. அதற்குச் சுள்ளியென்னும்பெயருமுண்டென்று ஐயங்காரவர்கள் சொல்வதாற்றெரிகிறது. காஞ்சிநதிக்குச்சொல்லியிருக்கு மிலக்கணங்களைப் பேர்யாற்றினிடத்தின்மட்டும் பார்க்கலாம். பேர்யாறு சேரனது நதியாக அடியிற்கண்ட பாடல்களிற் சொல்லப்பட்டிருக்கின்றது.

"விடுநிலக்கரம்பைவிடரளைநிறையக்
கோடைநீடக்குன்றம்புல்லென
வருவியற்றபெருவறற்காலையு
நிவந்துகரையிழிதருநனந்தலைப்பேர்யாற்றுச்
சீருடைவியன்புலம்வாய்பரந்துமிகீஇயர்
உவலைசூடியுருத்துவருமலிர்நிறைச்
செந்நீர்ப்பூசலல்லது
வெம்மையரிதுநின்னகன்றலைநாடே. (பதிற்றுப்பத்து-செய். 28.)

இது பல்யானைச் செல்கெழுகுட்டுவனைப் பாலைக்கௌதமனார்பாடியது.

இரும்பனை திரங்கப்பெரும்பெயலொளிப்பக்
குன்றுவறங்கூரச்சுடர்சினந்திகழ
வருவியற்றபெருவறற்காலையு
மருஞ்செலற்பேராற்றிருங்கரையுடைத்துக்
கடியேர்பூட்டுநர்கடுக்கைமலைய. (பதிற்றுப்பத்து-செய். 43).

இது செங்குட்டுவனைப் பரணர்பாடியது.

மேற்கண்டபாடல்களிற் பேர்யாற்றைவருணிக்கும்பரணர் பாலைக் கௌதமனா ரிருவருமொத்து அவ்வியாற்றிற்குச்சொல்லு மிலக்கண மொன்றுளது. அதாவது கோடைமுதிர்ந்து வானம்பெய்தலற்று மலைவீழருவிகளில்லனவாய்ப்போகுங்காலத்து மிருகரையுநிறைந்து போகும் மலிபுனலையுடையது பேர்யாறு என்பதாம். பரணர் காஞ்சியைப்பற்றிச் சொல்லியதுமதுவே. "மலிபுனனிகழ்தரும்...வேனில்"

பெருங்குன்றூர்கிழார் இளஞ்சேரலிரும்பொறையென்னும் மற்றொருசேரனைப்பற்றிப் பதிற்றுப்பத்திற் பின்கண்டவாறு பாடியிருக்கின்றனர்.

மாற்றருந்தெய்வத்துக்கூட்டமுன்னிய
புனன்மலிபேர்யாறிழிதந்தாங்கு
வருநர்வரையாச்செழும்பஃறாரங்
கொளக்கொளக்குறையாதுதலைத்தலைசிறப்ப (பதிற்றுப்பத்து-செய். 88). என,

இதற்குரையாசிரியர் "தெய்வத்துக்கூட்டமுன்னியயாறென்றது அத்தெய்வங்கூடியுறைதலையுடைய அயிரைமலையைத் தலையாகக்கொண்டு ஒழுகப்பட்டயாறு" என்றுரை யெழுதியிருக்கின்றனர். இதனால் பேர்யாறு அயிரைமலைப்பிறந்து மேல்கடல்மண்டும் யாறென்றுதெரிகிறது. அயிரைமலை ஸஹ்யபர்வதத்தின் ஓர்பாகம்.

அகநானூற்றில் நக்கீரர் பொருநையைப்பற்றிப் பின்கண்டவாறு சொல்லியிருக்கின்றனர்.

தெண்ணீருயர்கரைக்குவைஇய
தண்ணான்பொருநைமணலினும்பலவே (அகம்-93) என, இதிற்சொல்லிய "தெண்ணீருயர்கரைக்குவைஇய" வென்னுமிலக்கணம் பேர்யாற்றிற்குச்சொன்ன இலக்கணத்தோடொத்திருக்கிறது. பின்வரும் புறநானூற்றுப்பாடலுக்கு விசேஷவுரை யெழுதியிருப்பதில் (B. A. Test Book) சங்கநூலாராய்ச்சியிலிணையற்றுவிளங்கும்மகாமகோபாத்தியாய சாமிநாதையரவர்கள் ஆன்பொருநை பேர்யாறென்றெழுதியிருக்கிறார்கள்.

அடுநையாயினும்விடுநையாயினு
நீயளந்தறிதிநின்புரைமைவார்கோற்
செறியரிச்சிலம்பிற்குறுந்தொடிமகளிர்
பொலஞ்செய்கழங்கிற்றெற்றியாடுந்
தண்ணான்பொருநைவெண்மணற்சிதைய" (புறநானூறு 36.)

சேரரது வஞ்சி, பொருநையின்னதெனத்தேறுவதற்கு விசாலித்த ஆழ்ந்தவிசாரணையைச்செய்தவரும் தமிழாராய்ச்சிக்கு மார்க்கதர்சியு மாய்விளங்கிய ஸ்ரீமான் கனகசபைப்பிள்ளையவர்களும் பொருநை பேர் யாறென எழுதியிருக்கின்றனர்.

அரசனுக்குப் பலநதிகளிருந்தாலுமவற்றிற் சிறந்தநதியொன் றையே அவனுக்கு நதியாகப்பண்டிதர்கள் சொல்லுவதுவழக்கம். சோழனுக்குப்பெண்ணையாறு, பாலாறு, வெள்ளாறுமுதலிய நதிகளிருந் தாலுஞ் சிறந்ததாயுள்ள காவிரியொன்றையே அவனாறுகச்சொல்வது வழக்கம். பாண்டியர்க்குமவ்வாறே வைகை. சோழர்காவிரியில் விழுஞ் சிற்றுபநதிகளாகிய ஆம்பிராவதி, நொய்யலைச் சேரர்தங்களதாகப் பெருமையாய்ச்சொல்லிக்கொண்டார்களென்பது சிறிதும்பொருத்த முடையதன்று. தமிழ்நாட்டு மூவேந்தர்க்கும் மூன்றுயாறுகள் சொல் லப்பட்டுவந்ததென்பது பின்கண்டவெண்பாவால் விளங்கும்.

மும்மலையுமுந்நாடுமுந்நதியுமுப்பதியு
மும்முரசுமுத்தமிழுமுக்கொடியு—மும்மாவுந்
தாமுடையமன்னர்தடமுடிமேற்றூரன்றோ
பாமுறைதேர்வள்ளுவர்முப்பால் (திருக்குறள்-திருவள்ளுவமா-செய். 10.)

இது சீத்தலைச்சாத்தனார்பாடியதாகத் திருவள்ளுவமாலையிற் காணப் படுகிறது. ஓர் யாற்றிற்குப் பலபேரிருந்தால் கவிகள் ஒவ்வொரு பெயரை யொவ்வோரிடத்திற் சொல்லுவதுவழக்கம். சோழனதுநதி யின்பெயர் பொன்னியென்று சிலவிடங்களிலும் காவிரியென்று சில விடங்களிலுஞ் சொல்லப்பட்டிருக்கிறது. அதனாலந்நதிவேறாகாது. பேர்யாறு, காஞ்சி, பொருநையென்று சொல்லப்பட்டிருப்பது ஓரே யாறென இதனால் விளங்கும்.

மேலும் வஞ்சி, மலைநாட்டின்கண்ணேயுள்ள நகரமென்று நான் சொல்லும் வேறுகாரணங்களால் ஸ்தாபிக்கப்பட்டால் அவ்வஞ்சியைச் சார்ந்திருக்கும் யாறு மலைநாட்டிலில்லாது எங்கு இருக்கும்.

சோழன் குராப்பள்ளித்துஞ்சிய கிள்ளிவளவன் கருவூரெறிந் தானைக் கோவூர்கிழார்பாடியது புறநானூற்றில் (373) காணப்படுகிறது. கிள்ளிவளவன் சோணாட்டிலிருந்து கருவூரெறிவதற்காக மலைநாடு சென்றானென்பதைக்காட்ட அப்பாடலில் "கொங்குபுறம்பெற்றகொற் றவேந்தே"யென்று சொல்லப்பட்டிருக்கிறது. அதேபாடலில்

"வஞ்சிமுற்றம்வயக்களனாக
வஞ்சாமறவராட்போர்பழித்துக்
கொண்டனைபெருமகுடபுலத்ததரி"

என்று சொல்லப்பட்டிருப்பதில் "குடபுலத்து" என்பது கருவூர்மலை நாட்டிலுள்ளதென்பதை யையமற விளக்குகின்றது.

ஐயங்காரவர்கள் "இளங்கோவடிகள் தந் தலைவனது பேரியாற்று யாத்திரையை வருணிக்குமிடத்து ஒருநூற்றுநாற்பதுயோசனைதூரம் இந்திரன்யானைகளைப்பரப்பிச் செல்வதுபோலச் சென்றானென்று சொல்லுமிடத்து "ஒருநூற்றுநாற்பது" என்னுந்தொடர் இந்திரனது யானைப்பரப்பினது தூரத்தைக்குறிப்பதென்பதினுஞ் செங்குட்டுவனது பிரயாணதூரத்தைக்குறிப்பதென்பதே பொருத்தமாகும் என்று சொல்லுகிறார்கள். அதாவது ஆனிலைக்கருவூருக்குஞ் செங்குன்றுக்குமுள்ள தூரத்தைக்குறிக்குமென்பது அவர்களது அபிப்பிராயம். ஒருயோசனையாவது எவ்வளவு தூரமென்பதைப்பார்ப்போம். சாமிநாதையரென்னும்போராசிரியரவர்கள் சீவகசிந்தாமணி விசேடக்குறிப்பில் "நாற்காதந்தான் யோசனை என்று சைனரும், 4நாழிகைவழி அல்லது 7½நாழிகை வழியென்று மலைநாட்டாரும் 4 குரோசவளவென்று வடநாட்டாரும் வழங்குவரென்று எழுதியிருக்கிறார்கள். பூர்வசரித்திரவாராய்ச்சியிற் பிரசித்திபெற்ற டி. எஸ். குப்புசாமிசாஸ்திரியவர்கள் செந்தமிழ்த்தொகுதி 14 பகுதி 12-ற் சிந்தாமணியிற் சொல்லியிருக்கும் யோசனை 32000 முழங்கொண்டதாமெனச்சொல்லி நவீனபரிசோதகர்கள் அதையேறக் குறைய $9\frac{1}{11}$ மைலளவினதென்று கணக்கிட்டிருக்கிறார்களென்று எழுதியிருக்கிறார்கள். புராணங்களில் 4 ஹஸ்தம் அல்லது முழங்கொண்டது ஒருதண்டம் அல்லது பாகமென்றும் 2000 தண்டங்கொண்டது ஒரு கவ்யூதி அல்லது குரோசமென்றும் 4 கவ்யூதிகொண்டது ஒருயோசனையென்றுஞ் சொல்லியிருக்கிறது. புராணங்களின் கணக்குப்படி யோசனை 9 மைலளவுக்கு மேற்படும். யோசனையெனினுங் காவதமெனினும் ஒன்றே. வழக்கிற்காவதம் 10 மைல் நீளமுடையதெனக்கொள்ளப்படுகிறது. மாகதயோசனையென்பது தமிழ்நாட்டுவழக்கிலில்லாததொன்றாகையால் அதைவிடுப்போம். 140 யோசனையென்பது மேற்கண்ட கணக்குகளில் ஒன்றின்படி 5600 மைல்தூரமும், மற்றொன்றின்படி 1400 மைல்தூரமும், மற்றொன்றின்படி 1260 மைலுக்குமேற்பட்ட தூரமும், வழக்கு அல்லது மலைநாட்டார்கணக்கிலொன்றின்படி 1400

மைல்தூரமுமாகும். மலைநாட்டாருடைய சிறியகாவதவளவை எடுத்துக்கொள்வதாயிருந்தால் 740 மைலுக்குமேற்படும். கருவூருக்குஞ் செங்குன்றுக்கும் 300 மைல்தூரந்தானுள்ளதென்று ஐயங்காரவர்கள் சொல்லுகிறார்கள். அப்படியானலவர்கள் சொல்லுகிறபடி 140 யோசனைதூரமென்பது பிரயாணதூரத்தைக்குறிக்காதென்பது தெளிவாய்த்தெரிகிறது. அவ்வையவர்களும் நன்கறிவார்களாதலால் "இளங்கோவடிகள்காலத்து ஒருயோசனையினளவு 2½ மைலுக்குட்பட்டதாகவிருந்ததுபோலும்" என்று குறிப்பிலெழுதியிருக்கிறார்கள். இவ்வாறு அவர்கள் சொல்லுவதற்கு ஆதாரமெங்குங் காணப்படவில்லை. இருந்தாற் காட்டாதுவிட்டிருக்கமாட்டார்களென்று நினைப்பதற்குக் காரணங்களிருக்கின்றன. நாம் பிடித்ததேசாதிப்பே மென்னுங்கூற்றோர் தமக்குவேண்டியவாறே எவற்றையுந் திரிப்பதியற்கை. உண்மையை வெளிப்படுத்தப் பாடுபடும் ஐயங்காரவர்கள் அவ்வழியிற்செல்ல வுடன்படார்களென்று நினைக்கின்றேன். இவ்வளவு வாதத்துக்கிடமாயுள்ள சிலப்பதிகாரவரிகள் பின்கண்டவாறுள்ளன.

"வளமலர்ப்பூம்பொழில்வானவர்மகளிரொடு
விளையாட்டுவிரும்பியவிறல்வேல்வானவன்
பொலம்பூங்காவும்புனல்யாற்றுப்பரப்பும்
இலங்குநீர்த்துருத்தியுமிளமரக்காவும்
அரங்கும்பள்ளியுமொருங்குடன்பரப்பி
யொருநூற்றுநாற்பதுயோசனைவிரிந்த
பெருமால்களிற்றுப்பெயர்வோன்போன்று" என்பன. சிலப்-காட்சி-
(10-முதல் 16-வரை அடிகள்).

அரும்பதவுரையாசிரியர் ஓரிடத்தில் "பூங்காமுதலானவற்றை யானைமேலுளவாகநிருமித்து" என்றும், மற்றோரிடத்தில் "களிற்றிலே யிவற்றைப்பரப்பிப்பெயர்வோனென்க" என்றும் எழுதியிருக்கிறார். மேற்றிசைக்கண்ணதோரிடத்திலிருந்து கீழ்த்திசைக்கண்ணுள்ளதோரிடத்திற்குச் செல்லுமொருவன் தன் பரிவாரங்கள்முதலியனவற்றைப் பரப்பினனென்றால் தெற்குவடக்கிற் பரப்பினனென்றர்த்தமா? கிழக்குமேற்கிற் பரப்பினனென்றர்த்தமா? தெற்குவடக்கிற் பரப்பினனென்ப தியற்கையான வர்த்தமென்றுகொண்டால் அது பிரயாணதூரத்தைக் குறிக்குமென்று சொல்லுவதற்கிடமில்லை. கிழக்குமேற்கில் முழுத்தூரத்தையும் பரிவாரங்களாற் பரப்பிவிட்டால் செல்வதற்கிடமில்லாமற்போமே; பரப்புக்கு நீளமகலமிரண்டுமிருந்தேதீரவேண்டுமென்றால்

எத்தனையோசனை நீளம்? எத்தனையோசனையகலம்? "ஒருநூற்று நாற்பதுயோசனை" யென்னுந் தொடர் பிரயாணதூரத்தைக் குறிக்க வந்ததென்பது அப்பொழுதும் ஏற்காதே. இவ்விடத்து மேற்கண்ட தொடர்மொழியுவமைப்பொருளாகிய இந்திரனது யானைப்பரப்பையே குறிக்கவந்ததென்பது அதை நன்கு கவனிப்பதனாற் புலப்படும்.

பழையநாணயங்கள் கருவூரிலகப்படுவது சேரராஜதானி கருவூரென்பதைக்காட்டுமோர் சாக்ஷியமென்று ஐயங்காரவர்கள் நினைக்கிறார்கள். தமிழ்நாட்டிற் பல சிற்றூர்களிலும் பழையநாணயங்கள்கப் படுகின்றன. நாணயப்பரிசோதகர்களை விசாரித்தாற் செவ்வையாய்த் தெரிந்துகொள்ளலாம். அவ்வாறு பழையநாணயங்கள் அகப்படுமூர்களையெல்லாம் சேரராஜதானியென்றுகொண்டாற் சேரர்கள்ராஜதானியின்சங்கியை பெருகிவிடும். கருவூர் தொன்றுதொட்டுச் சோழர்களுடைய பெரும்பதிகளிலொன்றென்றும் வியாபாரம் பலமாயவ்விடத்திலெப்பொழுதும் நடந்துவந்திருக்கவேண்டுமென்றுந் தோன்றுவதாற் பழையநாணயங்க ளவ்விடத்திலேனகப்படா?

ராஜராஜன் அவன்பிள்ளை ராஜேந்திரனிவர்கள்காலங்களிற் கருவூரைச்சேர்ந்த வெங்காலநாட்டிற்குக் கேரளாந்தகவளநாடென்றும் குலோத்துங்கன்காலத்துச் சோழகேரளமண்டலமென்றும் பெயர்கள் வழங்கிவந்தனவென்பது கருவூர் பசுபதீசுரர்கோயிலிலுள்ள சாஸனங்களால் வெளியாகின்றதென்று ஐயங்காரவர்கள் சொல்லுகிறார்கள். மேற்கண்ட சோழசக்கரவர்த்திகள் சேரர் பாண்டியர் முதலானவர்களை ஜயித்தபிறகு பாண்டியகுலாசனியென்றும் கேரளாந்தகன் என்றும் சோழகேரளன் என்றும் பலபெயர்களை வைத்துக்கொண்டார்கள். பாண்டியகுலாசனி, கேரளாந்தகன் என்பது முதலியபெயர்களை வகித்தவன் ராஜராஜன். சோழகேரளனென்னும்பெயரை வகித்தவன் குலோத்துங்கன் III. பாண்டியகுலாசனிவளநாடு என்று தஞ்சாவூரைச் சூழ்ந்துள்ளநாட்டுக்கு ராஜராஜனாற் பெயர்கொடுக்கப்பட்டது. இப்பெயர் தஞ்சாவூரைச்சூழ்ந்துள்ளநாடு எக்காலத்திலாவது பாண்டியராட்சியிலிருந்ததென்றுகாட்டாது. கேரளாந்தகவளநாடு உறையூர் முதற்கருவூர்வரையிலுள்ள நாட்டையுமடக்கிக்கொண்டிருப்பது. உறையூரெக்காலத்திலாவது சேரருக்குச்சொந்தமாயிருந்ததென்பதை யப்பெயர்காட்டாது. கங்கைகொண்டசோழபுரத்திற் குலோத்துங்கனது

III அரண்மனைக்குச் சோழகேரளமென்றுபெயர். அவ்வரண்மனையிற் சேரனுக்கு எக்காலத்திலாவது ஏதாவதுசம்பந்தமுண்டா? குலோத் துங்கன் III காலத்திற் கொங்கு சோழகேரளநாடென்றும், கருவூர் முடிவழங்குசோழபுரமென்றும், அழைக்கப்பட்டனவென்று லவை ஐயங்காரவர்கள் சொல்வதிலெந்த அம்சத்துக்காதாரம்? ராஜராஜன் கி. பி. 10-ம்நூற்றாண்டிறுதியிலும் 11-வதுநூற்றாண்டுத்துடக்கத்திலு மிருந்தான். குலோத்துங்கன் III 12-ம்நூற்றாண்டிறுதியிலிருந்தான். சங்ககாலத்துக்குந் தேவாரகாலத்துக்குமிடையே (அதாவது அவர்கள் சொல்லுகிறபடி 5-ம்நூற்றாண்டுக்கும் 7-ம்நூற்றாண்டுக்குமிடையிற்) சோழர்கள் கருவூரையாக்கிரமித்துக்கொண்டார்களென்றுங் கருவூர் சோணாட்டின் முக்கிய நகரங்களிலொன்றாகிவிட்டதென்றும் சொல்லு கிற ஐயங்காரவர்கள் 11-வது 12-வதுநூற்றாண்டின்சங்கதிகளை யெதற் குப் பிரஸ்தாபிக்கிறார்களென்று தெரியவில்லை.

சிலப்பதிகாரகாலத்திற் கொங்குநாடு யாரரசாட்சிக்குட்பட்ட தென்றுபார்ப்போம். சிலப்புதிகாரம் வரந்தருகாதையிற் கண்ணகிக்குக் கோட்டம்வகுத்து விழாநடத்தியபோது அவ்விடத்திருந்த அந்நியநாட் டரசர்க ளின்னாரென்றுசொல்லியிருக்கிறது. அதில் மாளுவவேந்தன், இலங்கைக்கயவாகுவேந்தன்முதலியோர்களோடு கொங்குநாட்டரசனு மிருந்தானென்று சொல்லப்பட்டிருக்கிறது. இதனை,

உலகமன்னவன்நின்றோன்முன்னர்
அருஞ்சிறைநீங்கியவாரியமன்னரும்
பெருஞ்சிறைக்கோட்டம்பிரிந்தமன்னரும்
குடகக்கொங்கரும்மாளுவவேந்தரும்
கடல்சூழிலங்கைக்கயவாகுவேந்தனும். *என்பவற்றாலறியலாம்

உரைபெறுகட்டுரையில் "அதுகேட்டுக் கொங்கிளங்கோசர் தங்கணாட் டகத்து நங்கைக்கு விழவொடு சாந்திசெய்ய மழைதொழிலென்று மாறாதாயிற்று" இவ்வடிகளினாலே சிலப்பதிகாரத்திற் குறிப்பிட்ட காலத்துக் கொங்குநாடு தனியரசாட்சியிலிருந்ததாகவேற்படுகிறது.

கருவூர் கொங்குநாட்டிலுள்ள நகரென்றாலுங் கொங்கின்கீழெல் லையையொட்டித்தானே யிருந்திருக்கவேண்டும். கருவூரைச்சுற்றிச் செங்குட்டுவனுக்கு நாடிருந்தாலந்நாட்டுக்குப் பெயரென்ன? குடவர் கோமான், குட்டுவர்பெருந்தகை என மலைநாட்டிலுள்ள நாடுகளுக்கு அரசனென்று காட்டக்கூடியபெயர்களவனுக் கிருப்பதுபோலக் கரு வூரையடுத்தநாட்டுக்கரசனென்பதைக் காட்டுவதற்கு ஒருபெயரிருக்க வேண்டுமே! அப்பெயரென்ன? கொல்லிமலையவனுக்குட்பட்டிருந்தது. "கொல்லியாண்டகுடவர்கோவே"யென்று சொல்லப்பட்டிருக்கிறான்.

* சிலப்-வரந்தருகா-(156 முதல்160 வரை அடிகள்)

செங்குட்டுவனது தண்டமும் தண்டத்தலைவர்முதலியவர்களு மிருப்பதற்கிடம்யாதாகும். செங்குட்டுவன் கருவூரிலிருந்தால், தன்மலைநாட்டுக்குப்போகுந்தோறுங்கொங்குநாடுகடந்துபோகவேண்டும். மலைநாட்டார் அரசனைக்காணவருந்தோறுங் கொங்குநாடுகடந்தேவந்தாகவேண்டும். "குடதிசைவாழுங்கோ" என்று செங்குட்டுவனைச் சிலப்பதிகாரத்திற் சொல்லியிருப்பதொன்றே இந்தச்சந்தேகங்களையெல்லாம் ஓட்டுவதற்குப் போதுமானதல்லவா? ஆனிலைக்கருவூரில் வாழ்ந்திருந்தால் "குடதிசைவாழுங்கோ" வென்று சொல்லப்படுவானு? "கொல்லியாண்ட" என்று அவனைச்சொல்லியிருப்பதுபோல "குடதிசையாண்ட"வென்று மட்டுஞ் சொல்லியிருந்தாலல்லவா சந்தேகங்களுக்கிடமுண்டு.

வி. ஏ. ஸ்மித்தென்பவர் இந்துதேசபூர்வசரித்திர ஆராய்ச்சியிற் சிறந்தவரென்று பலராலுமங்கீகரிக்கப்பட்டவர். ஐயங்காரவர்களுந் தமக்கு மேற்கோளாக அவர் எழுதியதையடிக்கடி காட்டுகிறார்கள். அவர் 1914-ம்வருஷத்தில் வெளியிட்டிருக்கிற "ஹிந்துதேசபூர்வசரித்திரமென்னும்புத்தகத்தில் "சிலர் தவறுதலாய்க் கோயமுத்தூர்டிஸ்திரிக்கட்டிலுள்ள கருவூரைச் சேராது ராஜதானியென்றுகொண்டனர். அவர்கள்கொள்கை பிசகென்பதிற் சந்தேகமேயில்லை" யென்றெழுதியிருக்கின்றனர். கருவூரிப்பொழுது திரிச்சிராப்பள்ளி டிஸ்திரிக்கட்டைச் சேர்ந்துவிட்டது.

சரித்திரம், பூர்வசரித்திரமிரண்டிற்கும் புரொபெசராய் கவர்ன்மெண்டாரால் மதிராஸ் யூநிவெர்சிடிக்கு நியமிக்கப்பட்டிருக்கிறஸ்ரீமான் யஸ். கிருஷ்ணஸ்வாமி ஐயங்காரவர்கள் "பூர்வஇந்தியா" என்று ஒரு புத்தகம் சமீபகாலத்தில் வெளிப்படுத்தியிருக்கிறார்கள். அதிற் சேராது ராஜதானியாகிய வஞ்சி மேல்கடற்கரைக்கண்ணதென்று எழுதியிருக்கிறார்கள்.

சிலாசாஸனங்கள் பிரதியெடுக்கவும் பூர்வசரித்திரவாராய்ச்சி செய்யவுங் கவர்ன்மெண்டாரால் நியமிக்கப்பட்டு வெகுகாலம் வேலை பார்த்துவந்தவரும் பிரசித்திபெற்றவருமான டாக்டர் ஹூல்ட்ஷ் என்பவர் "கோயம்புத்தூர் டிஸ்திரிக்கட்டுக் கருவூரைச் சேராதுராஜதானியாகச்சிலர் கொள்கிறார்கள். அது முழுதும் பிசகு" என்றெழுதியிருக்கிறார். S. I. I. vol. III. Part I p. 31. ஆனிலைக்கருவூரைச் சேரர் ராஜதானியல்லவென்று கொண்டோர் அநேகர்.

இந்த வியாசத்தை நானெழுதிமுடித்தற்கு மகா-௱-ஸ்ரீ சிவஞானம் பிள்ளையவர்கள் செய்தவுதவி மறக்கற்பாலதன்று.

K. S. ஸ்ரீநிவாஸபிள்ளை.

# பதார்த்ததீபிகை.

——(:o:)——

## முற்றொடர்.

முன்னின்மை பின்னின்மை யொன்றினொன் றின்மை முழுதுமின்மை
பன்னு மபாவப் பகுப்பொரு நான்கு பதார்த்தமெனச்
சொன்னவை யேழுக்கு முள்ள வகையிவை தோகைநல்லாய்
இன்னினிச் சொல்வன் பிருதுவி யாதி யெடுத்துரைத்தே.

### அபாவம்.

அபாவமாவது நிடேதகாரணமான அறிவுக்கு விடயமாகும் பதார்த்தம். திரவியம் முதலிய பதார்த்தங்கள் ஆறினும் வேறாயுள்ள பதார்த்தம் எனலும் பொருந்தும். திரவியம் முதலிய ஆறும் பாவ பதார்த்தம். பாவபதார்த்தம்-உளதாயபதார்த்தம். அபாவம்-இன்மை. இன்மை நான்குவகை.

பன்னும் அபாவப்பகுப்பு முன்னின்மை பின்னின்மை ஒன்றினொன்றின்மை முழுதுமின்மை ஒருநான்கு எ-து. சொல்லப்படுகின்ற இன்மையின்வகை முன்னின்மை, பின்னின்மை, ஒன்றினொன்றின்மை முழுதுமின்மை என நான்குவகையாம் என்க.

வடநூலார் முன்னின்மையைப் பிராகபாவம் எனவும், பின்னின்மையைப் பிரத்துவஞ்சாபாவம் எனவும், ஒன்றினொன்றின்மையை அந்நியோந்யாபாவம் எனவும், முழுதுமின்மையை அத்தியந்தாபாவம் எனவுங் கூறுவர். பிராக்+அபாவம்=பிராகபாவம். பிரத்துவஞ்ச+அபாவம்=பிரத்துவஞ்சாபாவம். அந்நிய + அந்யாபாவம்=அந்நியோந்யாபாவம். அத்தியந்த+அபாவம்=அத்தியந்தாபாவம். பிராக்-முன். பிரத்துவஞ்சம் - அழிவு. அந்நியோந்யம் - ஒன்றினொன்று. அத்தியந்தம் - முழுதும். அபாவம் - இன்மை. பிராசீநநையாயிகர்-சாமயிகாபாவம் என ஒன்றுசேர்த்து ஐவகையாக்குவர். இவற்றின் விவரம் பின்னர்க் கூறற்பாலது.

இவை பதார்த்தம் எனச் சொன்னவை ஏழுக்கும் உள்ள வகை எ-து இவை பதார்த்தம் எனச் சொல்லப்பட்டவை ஏழுக்குமுள்ள வகையாகும் என்க.

இன்னினி பிருதுவியாதி எடுத்து உரைத்து சொல்வன் எ-து. இனிப் பிருதுவி முதலியவைகளை எடுத்துச்சொல்லி விவரணங்களையுஞ் சொல்லுவேன் என்க.

(வரும்.)

அ. குமாரசுவாமிப்பிள்ளை.

சுன்னாகம்.

# LITERARY NOTICE.

"SILAPPADIKARA" is an ancient and very groat Tamil work. In the work, certain occurrences in South India are described. The Solar Month, Date, Thithi, Varam (week days) and Nakshatrams of these occurrences are also given; but no clue for the year is to be found in the work or in its well written and able commentary. Many Scholars have attempted to fix the year. Some say the year is in Second Century A. D. A few others, Fifth Century A. D; still others Seventh Century A. D; and lastly some Eighth Century A. D. Last of all M. R. Ry. Diwan Bahadur L. D. Swami Kannu Pillai, M.A., B.L., L.L.B., F.M.U. has published 4 Magazine Pamphlets saying he has conclusively proved and shown that the year referred to in the work is 756 A. D. In his pamphlets he has tried to establish the same by constant reference to his work "Indian Chronology".

Now, a new person is come saying that the year referred to is 282nd year of Kaliyuga corresponding to Rowdra of Jupiter Cycle and to the year 2821—20 B. C. He has issued a printed notice to the fact promising a pamphlet very soon.

All Tamil Scholars are anxiously awaiting the Pamphlet.

"CHRONOLOGY".

T. K. NAGARAJA ROW.

# ஒரு நூதன ஆராய்ச்சி.*

'சிலப்பதிகாரம்' என்பது ஒரு புராதனமான சிறந்த காப்பியம் என்பது யாவரும் தெரிந்தவிஷயம். நமது தென்னிந்தியாவில், சில சம்பவங்கள் நேர்ந்ததாக அக்காப்பியத்திற் கூறப்பட்டுள்ளன. அச்சம்பவங்கள் நிகழ்ந்தகாலத்தைக் குறிப்பிடும்போது, சௌரமான முறைப்படி மாதம், தேதி, வாரம், திதி, நக்ஷத்திரம் முதலியன துலக்கப்பட்டிருக்கின்றனவேயன்றி, சிலப்பதிகாரத்திலாவது அதன் சிறந்த உரையிலாவது வருஷம் இன்னதென்று வெளியாகவில்லை. சம்பவ வருஷத்தினைச் சித்தஞ்செய்யப் பெரிய கல்விமான்கள் பலர் முயன்று வருகின்றார்கள். அஃது, கி. பி. இரண்டாவது நூற்றாண்டினுள் ஓர் ஆண்டு என்பார் ஒருசாரார்; ஐந்தாவது நூற்றாண்டுள், என்பார் மற்றொருசாரார்; சிலர் ஏழாவது நூற்றாண்டுள் என்றும், வேறுசிலர் எட்டாவது நூற்றாண்டுள் என்றும் கூறிவருகின்றனர். கடைசியாக M.A., B.L., L.L.D., என்ற உயர்ந்த வித்தியாகீர்த்திப் பட்டங்கள் பெற்றவரும், சென்னைச் சர்வகலாசங்கத்தின் அங்கத்தினருமாகிய திவான்பஹதூர் L. D. சாமிக்கண்ணுப்பிள்ளை என்ற சிறந்த வித்வான் இதுவிஷயமான ஆராய்ச்சியிற்புகுந்து நான்கு சிறுபத்திரிகைகளை வெளியிட்டிருப்பதில், அச்சம்பவங்கள் கி.பி. 756வது ஆண்டில் நிகழ்ந்திருக்கலாம் என்று ஒருமுகமாய்த் துணிவாய்க் கூறுகின்றனர். தாம் இயற்றியிருக்கிற Indian Chronology 'இந்தியர் காலநிர்ணயவிளக்கம்' என்னும் கணிதநூலினின்றும் ஆதாரங்காட்டித் தமது சித்தாந்தத்தை நிரூபிக்கிறார்.

இதுநிற்க, இவ்வாராய்ச்சியில் முயன்றுவருகிற மற்றொருவர் குறித்த சம்பவங்கள் கலியப்தம் 282-வது ஆண்டில் அதாவது கி. மு. (2821—2820)-வது ஆண்டில் நிகழ்ந்தனவென்றும் அது பார்ஹஸ்பத்தியமானமுறையில் பிரபவாதி 60 வருஷங்களுள் 'ரௌத்திரி' வருஷமென்றும் சித்தஞ்செய்து, கூடியவிரைவில் ஒருசிறு பத்திரிகைவாயிலாகத் தமது ஆராய்ச்சியை வெளியிடக்கருதியிருப்பதாய் யாவருக்கும் தெரிவிக்கிறார்.

தமிழபிமானிகள் யாவரும் 'காலநிர்ணயம்' என்றதலைப்பிட்டு வெளிவரப்போகிற ஷை பத்திரிகையின் வரவை ஆவலுடன் எதிர்பார்த்துவருகின்றனர்.

N. V. சுந்தரராஜ ஐயர். T. K. நாகராஜராவ்.

(கையொப்பம்.)

---

* இது மேலே ஆங்கிலத்தில் எழுதப்பட்டுள்ள விளம்பரத்தின் மொழிபெயர்ப்பு.

ஸ்ரீ:

# புத்தகமதிப்புரை.

1. மதுராவிஜயம் என்ற வீரகம்பராயசரித்திரம். இது விஜயநகரத்தரசர்சரித்திரத்தின் பூர்வபாகத்தை விவரிக்குங்காவ்யரூபமாக வீரகம்பராயபாரியையாகிய கங்காதேவியென்னும் பண்டிதையால் வடமொழியிற்செய்யப்பட்டுள்ளது. இதிலுள்ள சுலோகங்களெல்லாம் சொற்சுவை பொருட்சுவைபொருந்திய திருந்திய செவ்விய நடையுடையனவாக விளங்குகின்றன. பெண்மக்களுள் வடமொழிவல்லுநராய் வைதுஷ்யமும், சாஹித்யசக்தியுமுடையராய்க் காவ்யங்கள் செய்வோருமுளராவரென்பதற்கு இது நிதர்சனமாயிருப்பதுபற்றி மிகவும் பாராட்டற்பாலது.

இக்காவியத்தினல் தேவியாருடைய கல்வித்திறமையும், பர்த்ருவாத்ஸல்யமும், ஞானசீலமும் முதலிய பலகுணங்களும் விளங்குவனவுமன்றிச் சரித்திரவாராய்ச்சிசெய்பவர்களறியவேண்டிய பலவிஷயங்கள் வெளியாகின்றன. தேவியார், பேதையார் என்னும் பெண்மக்களுளொருவராயிருப்பினும் அவர் தாமடைந்த வைதுஷ்யத்தை அவம்போக்காது விநியோகஞ்செய்திருப்பதைச் சற்றுயோசித்துப்பார்த்தால் சாதாரணமாகப் பெண்கல்வியின் அருமையையும், அதை உபயோகிக்கும் முறையையும், அதனாலாகும்பயனையும் எல்லோருமறிந்துகொள்ளற்கேற்றதொரு படியமைப்புப்போல் விளங்கும்படி குலமகட்குத்தெய்வங்கொழுநன் என்றகொள்கையையுடையராய்த் தம் பர்த்தாவின் வீரப்ரதாபாதி குணவிசேஷங்களை விஷயமாகக்கொண்டு பர்த்ருகீர்த்தனம்பண்ணித் தம் பர்த்தாவுக்கு இம்மையி லின்பமும் புகழுமுண்டாக்கிப் "புலவர்பாடும்புகழுடையோர்விசும்பின், வலவனூராவான வூர்தியெய்துப" என்றபடி மறுமையி லுத்தமலோகப்பிராப்தி யுண்டாகச் செய்துகொண்ட புத்திசாதுர்யம் நன்குபுலப்படத்தக்கது. இன்னும் பலவழிகளாலும் பாராட்டற்பாலதாகிய இக்காவியம் இடையிடையே சிற்சிலசுலோகபாகங்களெழுதாதுவிடப்பட்டும் சிலபாகம்சிதலரித்து மிருந்த ஓரேபிரதியைக்கொண்டு, ஸ்ரீமத்-பண்டித ஜி. ஹரிஹரசாஸ்திரிகளாலும் ஸ்ரீமத்-பண்டித வி. ஸ்ரீநிவாஸசாஸ்திரிகளாலும் பரிசோதிக்கப்பெற்று தேவநாகர அக்ஷரத்திற் பதிப்பிக்கப்பட்டிருக்கிறது. இதற்குத் திருவனந்தபுரம் சிலாசாசனபரிசோதகர் ஸ்ரீமத்-டி. ஏ. கோபிநாதராவ் எம். ஏ., அவர்களால் மிகவும் ஆழ்ந்த ஆராய்ச்சியுடன்கூடியதாய் ஆங்கிலத்தில் ஒரு முகவுரையும் எழுதப்பட்டுள்ளது. அதைப் படிப்பவர்களுக்கு இதிற் சொல்லாத பலவிஷயங்களும் நன்குவிளங்கும். இதன் விலை அணா 12. வேண்டுவோர் பதிப்பித்தோர்க்கெழுதிப்பெறலாம். தேவியாரது கல்வித்திறமையறியுமாறு கீழே சில சுலோகங்களுங் காட்டப்படுகின்றன.

நாமகள்வணக்கம்.

[illegible]

[illegible]

கவிதையின் இயல்புகூறல்.

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

நகரச்சிறப்பு.

[illegible]

[illegible]

---

2. பரமஹம்ஸபரிவ்ராஜக ஸ்ரீமத்-சங்கராசார்யஸ்வாமிகளுக்குரிய தாமிரசாசனங்களின் தொகுப்பு:—இது திருவாங்கூர் ஸமஸ்தானத்தின் சிலாசாசன பரிசோதகரான ஸ்ரீமத்- டி. ஏ. கோபிநாதராவ், எம். ஏ. அவர்களால் தொகுத்துப் பதிக்கப்பட்டு காஞ்சீ காமகோடிபீடத்தின் ஜகத்குருஸ்தானம்வகிக்கும் பரமஹம்ஸபரிவ்ராஜக ஸ்ரீ-சந்திரசேகரேந்த்ரஸரஸ்வதீ ஸ்வாமிகளுக்கு அர்ப்பணம் செய்யப்பட்டது.

இதில் வெளியிட்டிருக்கும் தாமிரசாசனங்கள் பலவும் கும்பகோணம் ஸ்ரீசங்கராசார்யமடத்துக்குரியன. அம்மடாதீனத்தில் இப்போதெழுந்தருளியிருக்கும் ஸ்வாமியின் நியமனப்படி ராயரவர்களிடம் அளிக்கப்பட்டுள்ள மூலசாசனங்களுக்குப்பிரதியாக எடுக்கப்பட்ட படங்களுடன் லேகனங்களைத்தொகுத்து அவற்றின் சரித்திரசம்பந்தமான விஷயங்களும் இடையிடையே ஆங்கிலபாஷையிலெழுதிச் சேர்க்கப்பட்டுள்ளன. இதிலுள்ள சாசனங்கள் பலவும் தேவநாகரியிலும் கிரந்தாக்ஷரங்களிலும் வடமொழியிலெழுதப்பட்டுள்ளன. ஒருசில தமிழிலுமெழுதப்பட்டுள்ளன. இதனால் சங்கரமடாதீனபரம்பரையில்வந்த ஆசார்யஸ்வாமிகளின் காலநிர்ணயங்களால் அக்காலத்தரசர்களின் காலநிர்ணயங்களும் சரித்திரங்களும் நன்குபுலப்படுமாதலால் சரித்திரவாராய்ச்சிசெய்வார்க்கெல்லாம் இது மிகவுமுபயோகமாகத்தக்கது. தமக்கிருக்கும் வேலைமிகுதிக்கிடையே இப்புத்தகத்தை யச்சிடவிரும்பிய ராயரவர்களது நன்முயற்சி பயன்படும்படி இப்புத்தகம் அச்சிடுவதற்கு வேண்டும் பொருளுதவிபுரிந்து ராயரவர்களை மகிழ்வித்த மதுரைத்தமிழ்ச்சங்கத்தின்

உபஅக்கிராசனாதிபதியும், ஆண்டிபட்டி ஜமீந்தாருமாகிய ஸ்ரீமான்-பெத்தாச்சிசெட்டியாரவர்களது உதாரசீலம் பாராட்டற்பாலது.

---

3. ஸம்ஸ்கிருத முசற்புத்தகம்:--இது பொன்னுத்தூர் சு. ஜானகிராமையரவர்களால் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டு கோ. சி. சுப்பையசுவாமியாற் பதிப்பிக்கப்பட்டது. இதில், யாரும் ஸம்ஸ்கிருதபண்டிதருதவியில்லாமலே வடமொழிகற்கும்படி தேவநாகரியெழுத்தால் எழுதி அவற்றிற்கு விவரணங்களும் தமிழிலெழுதப்பட்டுள்ளன. ஸம்ஸ்கிருதக் கல்வியபிலத்தொடங்குபவர்களுக்கு மிகவுமுபயோகமுள்ளது. இதன் விலை ரூபா 1. வேண்டுவோர் கோவிலூர் மடாலயத்திலிருக்கும் கோ. சி. சுப்பையசுவாமிக்கு எழுதிப்பெறலாம்.

---

பத்திராதிபர்.

உ

# பிழைதிருத்தம்.

——(o)——

செந்தமிழ் தொகுதி 14 பகுதி 12-ல் 488-வது பக்கத்தில் அளரசன் என்பதை அரசன் என்றும், 491-வது பக்கத்தில் 16-வதுவரியில் முன்னுடையரும் என்பதை முன்னுடையாரும் என்றும், 493-வது பக்கத்தில் ஐப்பிசிச்சதையத்திருநாளில் எழுந்தருளுந்திருநாள் 6 என்பதை 4 என்றும், திருமடைப்பள்ளிக்கு விறகுகொள்ள காசு $\frac{87}{16}$ என்பதை $8\frac{7}{16}$ என்றும், திரு அணுக்கருக்கு காசு 311 என்பதை 3. 11. என்றும், ஷை தொகுதி உள்ளுறை 6-ம்பக்கத்தில் க, உ, ங, ச, ரு, சா, எ, அ, கூ, க0, கக, கஉ தொகுதிகள் என்பதைப் பகுதிகள் என்றும், தொகுதி 15 பகுதி 1 பக்கம்-7 வரி 12-ல் 400 வருஷத்திற்குமுந்தி என்பதை 800 வருஷத்திற்குமுந்தி என்றும், பழமொழி 147-ம்பக்கம் 9-வதுவரியில் அரசர்மனமகிழும்படி வழிபட்டொழுகினராயினும் என்பதை அரசர்மனமகிழும்படி வழிபட்டொழுகினாராயினும் என்றும், 149-வது பக்கம் 27-வது வரியில் கருவினுட்டொடங்கியபொழுதே என்பதைக் கருவினுட்டங்கியபொழுதே என்றும் திருத்திக்கொள்க.

பத்திராதிபர்.

---

# இரணியன்வதைப்பரணி.

“செந்தமிழ்” (தொகுதி-௧௫ பகுதி ௧-ல்) ௪௮-ம்பக்கத்தொடர்ச்சி.

---

விரவியுக்கவெய்முத்தைவெவ்வனத்
தரவுமுட்டையென்றருகணைக்குமே. (71)

தோகையாடுமச்சுரமடங்கலுங்
கூகைபாடுவெங்குரல்பரந்ததே. (72)

வேறு.

ஊமன்வெங்குரல்பரந்தவோசைவெயிலூடுநின்றுடல்பிளத்தலா
லீமவெஞ்சுரமுளைந்துளைந்துமிகவெய்த்திரங்குகுரலொத்ததே. (73)

புகைந்தெழுந்தெரிபரந்தகானெறிபொறுக்கொளாதடிசுறுக்கொளா
வுகைந்தெழுந்துமிசைதாவியாவியொடுழைக்குலம்பலவுழைக்குமே. ()

எம்மையாளுடையவம்மைகானிலினியாவர்சென்றணுகுவாரதன்
வெம்மையாலலறிவானிலோடுமழைமேகசாலநிறம்வெளிறுமே. (74)

ஒருவராலணுகவரியகானிலினிதோடியாடுவனமோடிதோள்
மருவுதாதலர்தரித்துமானுமிளமைந்தனேறுமடமயிலுமே. (76)

எண்ணில்கோடிசராசரங்களிருந்துசெய்தவருந்தவன்
விண்ணின்மேலுமொராறுகண்டனன்வெஞ்சுரத்தழலஞ்சியே. (77)

ஆரும்வெவ்வழலஞ்சியோவினியண்டமேறுவனவாறெலாம்
பாரில்வெஞ்சுரமஞ்சியோபாதாளம்வீழ்வனபாவையோ. (78)

வண்டுமேவியதண்டுழாய்வரை......னெழுபாரெலா
மூண்டுமீளவுமிழ்ந்ததச்சுரமுற்றவெம்மைபொறுமலே. (79)

மையுலாவியகண்டர்கால்கள்சிவந்ததந்தமடந்தைவாழ்
வெய்யகானிடந்ததென்பதுவேதமேமிகவோதுமே. (80)

..................................................
......யங்கனிவாயணங்குறைகோயிலுண்டதுகூறுவாம். (81)

வேறு.

துத்திநாகராசன்மௌலிசேர்வுறுமணுவிரண்
டத்திபாரமுற்றபின்படித்தலம்படுத்ததே. (82)

படுத்துயர்ந்தசமலத்தின்மீதுபாதசிலைபிடித்
தெடுத்துயர்ந்தபத்தியண்டப்பித்தியல்லதில்லையே. (83)

முட்டுமேழுநிலைவகுத்துமூரிவானமுகடளந்
தெட்டுமால்வரைக்குலங்களிடையினின்றதூணுமே. (84)

தன்பராப்புநின்றிலங்குதாரகைக்குலங்களே
முன்பமைத்தமண்டபத்துமுத்தணிந்தபந்தரே. (85)

வட்டமாகவிட்டநீடுபுரிசைநேமிவானமே
விட்டவாசல்நாலுபாடும்வெ........திசைகளே. (86)

சிகரபாரமதனினூடுதேறியோதமேறுநீர்
மகரவாரிவேலையேழுமஞ்சனஞ்செய்வாவியே. (87)

காருலாவுபொழில்களேழுகணவரோடுபலியிரந்
தூருலாவிவந்தபின்புலாவுநந்தவானமே. (88)

வேலைவாயெழுந்துவானின்மீதுலாவுமிருவருங்
கா்லை........குந்துகைவிளக்கெடுப்பமரே. (89)

வேறு.

பயிரவிதன்கோயிலிதுபரிவாரமடமா
துயிரவிமின்பலிகொள்வதொருபீடமுன்னுளதாம். (90)

அப்பீடத்தலைகுருதியழற்றலடிவழுகுவன
மெய்ப்பீடத்தெழுந்தெழுந்துமிசைத்தாடுங்குறைத்தலையே. (91)

வேறு.

கரவில்வெஞ்..மிருந்துவென்றிகள்கருதுகின்றடிதொழுதுமுன்
பரவிமங்கையைவரமிருந்தவர்பலிகொளென்றெதிர்வருவரே. (92)

ஒருகைசென்றுதலைதிருகுமேகடிதொருகைசென்றுடல்தழுவுமே
யருகுநின்றவரரிபசுந்தலையாவலங்கொடழைக்குமே. (93)

அடலருந்திறல்நினைவுடன்சிலரரிபசுந்தலைப்பலிகொடுத்
துடல்வலஞ்செயவரமிருந்தவையொன்றிரண்டெனவெண்ணுமே. (94)

வேறு.

மிகவிருந்தாமரங்கடொறுமரிந்தரிந்துவிடுசிரங்கள்விடாதெப்போது
மிகுகுருதிசெம்புனலின்பசுமையுணர்ந்து...மற்றாங்குமாலோ. (95)

தண்டலைவாய்ப்பனங்கனிகளதிர்ப்பனபோற்றழைமரங்கள்
தமக்கெட்டாமல்
வெண்டலையாற்சிலகரும்பேய்பசுந்தலைகள்வீழவிசைத்
தெரியுமாலோ. (96)

வேறு.

எறியவிழுந்தலையொருபேயெடுக்குமாலோ
வெடுத்தனலைகைப்பிடித்தொருபேய்பறிக்குமாலோ
பறிபடுகென்றெனப்பலபேயலறுமாலோ
பயிரவிகளிவையிவைபார்த்திருக்குமாலோ. (97)

வேறு.

அமருகக்கடையுகத்தசனியொத்ததிர்குரற்
றமருகத்தினரெனத்திரிவர்பயிரவர்களே. (98)

இசைபடப்படமிதித்திடுநெடுத்தொழில்களிற்
றிசைகளெட்டிசைவுறத்திரிவர்பயிரவர்களே. (99)

கலகமிச்சிரருடற்கரியகட்டையர்நுதற்
றிலதமிட்டழகுறத்திரிவர்பயிரவர்களே. (100)

நெடியவாளெயிறுகானிலவினுலழகுறு
வடிவெலாமரவுபோல்வருவர்பயிரவர்களே. (101)

வேறு.

வெட்டிவந்தெதிர்வீழ்பசுந்தலை
யிட்டிறைஞ்சுவனயோகினிமாதோ. (102)

உடையுநாணுமுவமையுமொல்குமெ
விடையுமில்லவாயோகினிமாதோ. (103)

வெண்ணிலாநகையாளைவிடாதவ
ரெண்ணில்கோடியிடாகினிமாதோ. (104)

சூழநின்றுதொழுதிவர்போற்றிட
வாழுமங்கைவடிவமுஞ்சொல்லுவாம். (105)

வேறு.

கத்தவிசைப்பத்தர்முகச்செக்கருகத்தக்கதொழிற்
பத்தர்மனத்துப்பயில்பொற்சித்திரபற்பமனத்திளே. (106)

வெற்பவளக்கொப்பில்வகுப்பித்தவிரற்பத்திமிசைப்
பற்பலமுத்துக்கநிரைத்தொக்கநகப்பத்திகளே. (107)

செற்றதிறற்கொற்றசுரச்செச்சைநிறப்பச்சுநிரத்
துறைபணிலப்பொற்றுகிலொப்பித்தவுடைப்பொற்பினளே. (108)

அக்குவடக்கொத்துககிட்டறகளெனச்செக்கர்வயிரக்
கக்குவிடக்கட்செவியிற்கட்டுமுலைக்கச்சினளே. (109)

எட்டுளபொற்கைப்படையெட்டிற்பணிலத்துக்கிசையத்
தொட்டதிடத்துக்கைவலத்துச்சுழல்சக்கிரத்தினளே. (110)

வட்டமதிற்சித்திரமுகத்துக்கையென்மைக்கட்குருதிப்
பொட்டுநுதற்சற்பணிலப்பொற்குழைவர்க்கத்தினளே. (111)

கொக்கிறகொற்றைப்பிறையபுத்தரவக்கொத்தடியப்
புக்குறைசெக்கர்க்குடிலப்பொற்சடிலக்கற்றையளே. (112)

வேறு.

ஆகாசந்திருமருங்குலதிபாரவனமுலைமே
லேகாசந்தனிமாலையினிவென்றின்றியம்புவதே. (113)

அருளேதன்றிருமேனியாரணங்களொருநான்கின்
பொருளேதன்றிருத்தொழில்கள்புகழேதென்றியம்புவதே. (114)

குவளைமலர்ந்தனையவிழிக்கோமளத்தின்வடிவிதுமற்
றவளைமருங்ககலாதவலகைகளையினிப்பகர்வாம். (115)

வேறு.

தோலுமென்புநரம்புமலாவிடைசொல்லலாந்தகையில்லாவுடம்பின
காலுங்கையுநிறமுமெல்லாமுழுக்கங்குலாவிருகப்புவிட்டொரப்பன. ()

விற்கள்போல்வளைந்தபுறத்தனவிழியிரண்டும்வெறுங்குழியொப்பன
பற்கணீண்டுமறைந்தவுதட்டினபாழிபட்டபெரும்பகுவாயின. (117)

காதங்காதரைநீண்டகழுத்தினகட்செவிக்கிடங்காட்டுஞ்செவியின
வூதுங்காற்றினுடனேபறப்பனவுண்டியென்பனகண்டறியாதன. (118)

கொழுந்துதற்புகைபோல்வுயிர்த்தலிற்
கொல்லனூதுலையொப்பனமெல்லவே
யெழுந்துநிற்கின்விசும்பினின்முட்டியே
யிடம்பெறாமல்முடங்கியிருப்பன. (119)

தன்முகஞ்சுழிக்கின்றதலத்தினற்
றங்களைக்கொடுதாங்கள்கரத்தலா
லெம்மதென்றப்பொருளேகரத்தலா
லேற்றவர்க்கொன்றிடாதவரொப்பன. (120)

பற்றினுரைவிடாமையினலழும்பண்பினுற்றெழும்பாவனையாலு......
........செயவஞ்சனையால்வெறும்வாசியால்வரும்வேசையரொப்பன.()

வெட்டுவெட்டெனநெட்டைகள்போதவே
விலாவிற்கைவைத்துலாவுமுலாவன
பட்டபட்டினிவிட்டுவிடாதன
பசிக்கெலாமொருபாசனமாவன. (122)

வந்துவந்துடனின்றழும்பிள்ளைப்பேய்
வற்றன்மாமுலைபற்றியிசித்திட
நொந்துமுன்சிலகூலிட்டபேயினை
நோக்கிநோக்கித்தன்னுக்கினைமெல்வன. (123)

வேறு.

மலைப்பேய்கட்டிற்பேய்வனஞ்சூழலிட்பேயழற்போல்வருங்
கொலைப்பேய்வெதுப்பேகுளிர்ப்பேயெனத்தேவர்கொண்டாடுபேய். ()

கற்குங்குலைப்பேய்கவிப்பேய்கற்றேபிதற்றிப்பொருட்
டர்க்கஞ்சொலும்பேய்தவஞ்செய்துசாலத்தரம்பெற்றபேய். (125)

வன்பேய்கரும்பேய்வருந்தாவிழுந்தேவழிக்கேவரிற்
பின்பேவரும்பேய்பெரும்பேயெனச்சிந்தைபேயானபேய். (126)

இப்பேய்களும்பேய்களென்றூலுமிவைபோலியம்பெண்ணுமோ
கணப்போயதிற்சூலகரத்தாளழைத்தாள்கணப்பூதமே. (127)

வேறு.

கலைவளர்பிறையணிசடையனகரியுரியுடையவன்விடையன
மலையெனமறிகடலெனவருமழைமுகிலெனவருகுறளே. (128)

வடவையிலெரிவிழிசுழல்வனமதகரிநுகரினுமவியவீழ்
குடவயிறொருபுடைமெலிவொடுகுழைவனசிலசிலகுறளே. (129)

முருகவிழிதழியினிதழ்விரிதொடையனமுசலமொடெழும்வா
ளுருகெழுபடையனவிலையனதிருவருளுடையனசிலகுறளே. (130)

வேறு.

சுரும்பூதுமலரடிகள்தொழுதிறைஞ்சவெப்பொழுதும்
பெரும்பூதமொருகோடிபிரியாதுநிற்பனவே. (131)

ஐம்பூதமொருபூதமாயினபோலெனவந்து
கொம்பூதிவியன்மார்பங்குழலூதிநடந்தனவே. (132)

நறும்பூவும்புதுவிரையுநனிகொணர்ந்துபணிமுரலுங்
குறும்பூதமொருகோடிகுற்றேவல்செய்வனவே. (133)

வேறு.

இக்கணங்களிருபக்கமும்மிருக்குடனிருப்பவிமையோர்
தொக்கிணங்கிறைவியென்றசுராசனொடுநின்றுதொழவே. (134)

முழுகுபாலையழலாறமுதுபேய்க்
கழுகுபாறுநிழலாகவிடுகாவணம்விளாகநடுவே. (135)

தாருதன்பொருதடக்கையிலெடுத்தெதிர்பிடித்ததடக்கைப்
பேருகம்பலவுநிற்பதொருநாற்பலகைசெய்தபிறகே. (136)

நால்வகைக்குரியமூதரையிருத்தியகுருத்துநவிலுங்
கால்வகுத்தசுரரென்புகொடுகையுருவிசெய்தவிசிலே. (137)

வெஞ்சமத்தசுரர்குஞ்சிகொடுவேளவுணர்தைத்துவிடுசெம்
பஞ்சிமெத்தைமிசைநெட்டிணைபருத்ததொருபூதமிடவே. (138

வேகநாகமணிகாலவெயில்வெண்பிறைநிலாவிரவுநூ
ணேகநாயகிமகிழ்ந்தினிதிருந்தனளிருந்தபொழுதே. (139)

ஒல்லையொருபூதமிருபாதமலர்வந்துதொழுதன்னடியனே
னெல்லையில்வினைதமுளவல்லனவவற்றுளிதுகண்டருளெனு. (140)

நின்றுநெடுநாசியிலொருசியைநிறுத்தியதுநிற்கவதன்மே
லன்றொருபதோசனையுயர்ந்தசிலகுன்றபதினொன்றுழலவே. (141)

நெற்றிமிசையேநெடியசூலமுனையாலமெனநின்றுசுழலப்
பற்றிமிசையேறியபசாசுவிளையாடல்பலவும்பழகவே. (142)

மேவியகபோலதலமெத்தமணிமுத்தினையடக்கிவிரகா
லுவிலொருநூலினைமுறுக்கியதுகோவைபடநாலவிட்டவே. (143)

தோளின்மிசையேகுறியசொட்டைபலநெட்டையதனிட்டசுடர்வாள்
வாளினிமையேபெரியமாமுரசிருந்துமழைபோலதிரவே. (144)

கைத்தலமிரண்டினுமிரண்டுகதிர்வேல்முனைநிறுத்தியதன்மே
லித்தலமெடுப்பனவிரண்டுகுறளேறியிழியாதொழியவே. (145)

தூசியிருமண்டலயிருக்குமுறைசுற்றியிருகாலுமொருகால்
வீசியுடனொத்துமிடைகித்துநடையொத்தமிதித்துவருமே. (146)

மடித்தடியொறுத்தபினெடுத்துருமிடித்தெனவுதைத்துமலைபோற்
றடித்துடலிருப்பினுமுருப்பெறுதடித்தெனநடித்துவருமே. (147)

அப்படிநடித்திடவடிக்கடியதுக்கிசைநடித்தருளிவே
றிப்படிசெயற்கெதிவற்கினியிலக்கிலைவிலக்குகெனவே. (148)

வேறு.

அதுநோக்கந்தொழிலாறியடிவணங்கியணங்கரசி
யிதுநோக்கமெனவருளியிருந்தவரைமுகநோக்கி. (149)

மெய்நோக்கமுடனொருபேய்விழுந்திறைஞ்சியெழுந்திறைவி
யின்னோக்கம்பெறப்பெறுவார்க்கெப்பொழுதுமெளிதன்றோ. (150)

இவ்வண்ணமுலகேழுமெனையூழிதழைப்பதுநின்
செவ்வண்ணவாழ்விழியின்றிருநோக்கினருளன்றோ. (151)

அன்னைமுன்னுயிரனைத்துமளித்தனைநீயாளு
மென்னையுன்பெருங்கருணையெம்மளவுங்கண்டிலமோ. (152)

பற்றிநெடும்பசியானபடர்கொடுந்தீச்சுடவுடம்பு
வெற்றெலும்புவிறகாகவேகின்றேமென்செய்கோம். (153)

ஏழாழிசூழுலகிலிருபொழுதும்பசிப்படைத்த
பாழாவானெம்மைவெறும்பசியாலேபடைத்தனனே. (154)

நல்லார்க்குந்தீயார்க்குநானிலத்திற்பிறந்திறப்பா
ரெல்லார்க்குநமன்கூற்றமெங்களுக்குப்பசிகூற்றம். (155)

தாயென்றுமகவென்றுந்தன்பெரியாரைப்பிடித்தாற்
பேயென்றுந்தீர்த்துவிடும்பிடாரருமுன்பிடாரர்களே. (156)

இயந்திரத்தாற்குளிகைபுனைந்தியாமளத்திலெடுத்துரைக்கு
மந்திரத்தாற்றந்திரத்தால்வாராமற்காப்பர்களே. (157)

தாருகனுருடலுகுசெங்கடங்குருதிக்கடல்வழங்கி
யோருகமோவிரண்டுகமோவுண்டவுணராமையால். (158)

வந்தாண்மைபலபேசுமாமயிடன்குறையுடலந்
தந்தாளுமவனுடையதலையெமக்குத்தந்திலளே. (159)

எங்களத்தாய்களங்குருதியிமையவரோடவுணர்பொரும்
வெங்களத்திற்குளித்தவன்றுவிடாய்தீரப்பெற்றிலமே. (160)

இரும்பசிக்கும்பசிபசித்தோமெம்மையெலாமிப்படியே
பெரும்பசிக்குவிருந்தாக்கியிருந்தாய்க்கென்பிழைத்தனவே. (161)

வேறு.

என்றலைகையிவைகூறவிதுபேயென்றறிந்தெனுமுதுபேயொன்று
வென்றிலகுதிரிசூலிவிண்ணப்பமிதுகேட்கவேண்டுமென்றே. (162)

யாம்பேய்கள்பசித்தனமென்றியம்புவதெனெம்மளவென்
றெண்ணில்விண்ணோர்
தாம்பேய்களெனத்திரிவர்தம்பசியுமிழந்துவெறுந்
தரணிமேலே. (163)

(தொடரும்.)

சு. நல்லசிவன்பிள்ளை,

எழுத்தாளர்.

உ

# செந்தமிழ்ச்சிறப்பு.

"செந்தமிழ்" (தொகுதி-௧௫ பகுதி-௧-ல்) ௩௨-ஆம்பக்கத்தொடர்ச்சி.

ஏடா யிரமு மெழுதிப் படித்தறியாப்
பீடார் நலஞ்சேர் பெருங்கவியாய்—நாடாளு
மன்னர் மதிப்ப வருவீர ராகவனை
யுன்னித் தமிழ்ச்சீ ருரை. (46)

மந்தா கினிசூடு மாதேவன் சீரினையே
நிந்தாத் துதியா நினைந்துருகி—விந்தைக்
கவியால் வசைபாடுங் காளமே கம்போற்
புவிமீதார் பெற்றார் புகழ். (47)

எங்குறினும் நீங்கா விரட்டைப் பெரும்புலவர்
பொங்கரவம் பூணும் புராரியினை—அங்கங்கும்
பாடி நலம்பெற்றார் பக்கத் துணையாகக்
கூடுந் தமிழ்க்கவிதை கொண்டு. (48)

சிந்தித்துத் தேம்பித் திகைத்துப் பிறப்பென்னும்
பந்தத்துட் பட்டுழலும் பாடெல்லாம்—சிந்தையினிற்
பற்றாது வேரறுக்கும் பட்டினத்தார் பாடலையே
வற்றா வமுதமென மாந்து. (49)

சத்துச்சித் தானந்தம் தானாகுஞ் சோதியினைச்
சித்தத்துள் வைத்துத் தெளியவரு—மெய்த்துணிலைபத்
தேனனைய செந்தமிழிற் செப்புந் தனித்தாயு
மானவனை நெஞ்சே மதி. (50)

நண்ணுஞ் சிறுநதிக ளூடிக் கலந்திடலால்
மண்ணிற் பெருகிவரு மாநதிபோல்—எண்ணரிய
நூற்பொலிவுஞ் சொற்சுவையும் நுண்பொருளுஞ் சேர்ந்தொழுகி
யார்ப்பத் தமிழ்பரவு மால். (51)

அன்ன தமிழ்மொழியை யாயினைத் தெய்வத்தைப்
பன்னெடுநாட் கற்றோர் பருகிமகிழ்—இன்னமுதைக்
கண்டைப் பழிக்குங் கனியை நமதெனலே
பண்டைத் தவத்தின் பயன். (52)

கோவேந்தர் மூவர் குறுநில மன்னர்பலர்
பாவேந் தரைமுன்னம் பாலித்தார்—மாவேந்து
மாகத் தவனு மரனுங் கவிவாணர்க்
காகப் பணிபூண்டா ரால். (53)

அன்ன புலவர்தமை யாதரிப்பா னிந்நாளில்
முன்னிற் பவருண் முதன்மைபெறூஉ—மன்னவராய்ச்
செந்தமிழ்ப்பா வாணராய்ச் சேதுபதி யாய்ப்புவியில்
வந்தகுல வேந்தரையே வாழ்த்து. (54)

ஆயுந் தமிழ்ச்சொ லருமலராற் பாவாணர்
வேயு நறும்பா விரைமருவுந்—தூயமண
முல்லைமலர்ப் பைந்தாரான் முத்தமிழ்மு ழுங்கவரு
மெல்லையான் சேதுக் கிறை. (55)

மாவார் மொழிநாட்டி வண்டமிழ்ப் பாவோட்டி
நாவா லிசையிழைக்கு நாற்கவிஞர்—ஓவாமற்
சீராடை சாத்தச் சிறந்தோங்குஞ் சேதுபதி
மாராசர் சீரோது வாம். (56)

செய்யுந் திருப்பணியுஞ் செப்புங் கவிச்சுவையும்
வையம் பரவவரு வண்கொடையும்—ஐயமறக்
கற்றகவி வாணர் கருத்துறைவுஞ் சேதுகுலக்
கொற்றவர்தஞ் செல்வக் குவை. (57)

ஆற்றின் மணலு மகல்விசும்பின் மீனினமுங்
காற்றிற் றுகளுங் கணக்கிடலாம்—சாற்றரிதே
சேதுநா டாளுந் திருவுடைய மன்னர்புக
ழோதுபா வாணர்தமெண் ணோர்ந்து. (58)

சர்க்கரையுஞ் சவ்வாதுஞ் சாந்து மமுதுமெனத்
தக்ககவி வாணர் தமைவியந்தே—மிக்கநிதி
ஈந்தவரைப் பாலித் திசைநாட்டுஞ் சேதுபதி
வேந்தரையொப் பார்யார் விளம்பு. (59)

மாம்பழ மென்றும் மதுர கவியென் றுந்
தீம்பனுவல் பாடுந் திறம்பெருகி—மேம்படவே
வந்தபா வாணர்குழாம் வாழ்த்தி வரிசைபெற்ற
திந்தமா வேந்தரிடத் தே. (60)

மன்னவரை யொப்ப மதிகூ ரமைச்சருமே
சொன்னயமார் பாவின் சுவைமாந்தி—மன்னுபுகழ்ச்
செந்நாப் புலவர்தமைச் சீராகப் போற்றினரென்
றந்நாட் கவிகூறு மால். (61)

வேந்து மமைச்சும் விரவிச் சகோதரராய்ப்
போந்து முகவா புரியதனிற்—சேர்ந்ததூஉம்
வண்டமிழ் முன்போல் வளம்பெற்ற தூஉந்தமிழர்
பண்டைத் தவத்தின் பயன். (62)

கோலமுத்து ராமலிங்கக் கோமகனும் பாவலனும்
காலமுற்று நோக்கிக் கருமங்கொள்—நூலறிவு
சார்ந்தமதி மான்பொன்னுச் சாமியும்போற் செந்தமிழிற்
றேர்ந்ததனுக் கீந்தார்யார் செப்பு. (63)

பண்ணிசைத்துப் பாவியற்றிப் பாவாணர்க் கீத்துவந்து
நண்ணு மிசைசால் நலம்பெற்றார்—எண்ணுங்காற்
கன்றினுக்குத் தாயெனவே கற்றபா வாணர்கவிக்
கென்றுமிவர் நாம மினிது. (64)

மற்றவர்தம் மைந்தரும் மாணச் சிறந்தோங்கிக்
கற்றவர்கள் காமுறூஉங் கற்பகமா—யெற்றுதிரை
முந்நீர்சூழ் ஞாலத்து முத்தமிழை யாதரித்தார்
தந்நே ரிலராகத் தாம். (65)

மன்னன் கவிஞர் மனமலர்க்கு மார்த்தாண்ட
னென்ன வருபாற்க ரேந்திரனு—மன்னுபுகழ்ப்
பாண்டித் துரையென்னும் பாரிசிகர் வள்ளலும்போ
லீண்டித் தமிழ்வளர்த்தார் யார். (66)

தாதையர் தன்மந் தழைத்தோங்கச் செந்தமிழாம்
மாதயரா தென்றும் வளர்ந்தோங்க—நூதனமாச்
சங்கமொன்று நாட்டித் தனமீட் டினர்முன்போற்
றங்கவென்று கூடற் றலத்து. (67)

தந்தை வளர்த்த தருமந் தழைக்கவென்றே
சொந்தமொழி பாலிக்குந் தூயவருள்—முந்தவரு
சீராஜ ராஜேந்த்ரச் செம்மனுமச் சங்கத்தைச்
சீராகக் காக்குஞ் செயல். (68)

*கண்ணில்வரு நோயைக் கடியப் பொருளுதவி
பண்ணிப் பரிந்துநமைப் பாலித்த—புண்ணியனைச்
சீராஜ ராஜேந்த்ரச் செம்மலை நன்னெஞ்சே
பாராட்டிப் பைந்தமிழிற் பாடு. (69)

தெள்ளியரு மாகித் திருவு முடையராய்
வள்ளுவரும் பொய்ப்பவரு மன்னவராய்—வள்ளலாய்
வாழையடி வாழையாய் வந்துதமிழ் காப்பவே
ஏழிசையுங் காக்கு மிவர். (70)

பொன்னிப் புனலும் பொழிலார் துறைசைதனில்
மன்னுங் குருவருளு மாசேது—மன்னவர்தம்
அன்னமும் வாய்ப்ப வகமகிழ்ந்து முத்தமிழைப்
பன்னிப் பயில்வார் பலர். (71)

* காசக்கொடி (Cataract) படர்ந்து இருவிழியும் இருண்டு மறைந்தகாலத்தில், மனந்தளர்ந்து பல்லாற்றானும் வருந்தியுழந்த எளியேன்மீதிரங்கிப் பொருளுதவிசெய்தும் இனியமொழிகூறியும் காத்தருளிய கருணைவள்ளலாகிய Hon' ஸ்ரீமான் ராஜராஜேஸ்வரசேதுபதி மகாராஜா அவர்கள்மீது நன்றிபாராட்டியானியற்றிய "நன்றிகமழும் நறும்பாக்கலவை" என்னும் ஒரு சிறுநூலை அம்மன்னவர்கள் முன்னிலையில் அரங்கேற்றியசமயத்தில் அவர்கள் அன்புகூர்ந்து அதனையேற்றுத் திருவுளமகிழ்ந்து பாடியருளிய வெண்பாவின் முதலடியே இவ்வெண்பாவின் முதலடியாக அமைக்கப்பட்டுளது. மன்னரவர்கள்பாடிய வெண்பா பின் வருமாறு:—

"கண்ணில்வரு நோயைக் கடியப் பொருளுதவி
பண்ணியதி னன்றிதனைப் பாராட்டி—உண்ணு
மமிழ்தி னினிய வருங்கவிகள் சொன்னான்
தமிழறியுஞ் சுந்தரா சன்."

தென்னவ னென்னச் சிறந்தே யரசுரிமை
மன்னுந் தமிழ்நாட்டு மாவேந்தன்—மின்னுமையாள்
தொண்ட னறிஞர் துதிபரவுந் தோண்டைமான்
வண்டமிழ்க்குக் கொண்டலென வாழ்த்து. (72)

கொண்ட குலநிதியைக் கூட்டிப் பெருக்குதலே
கண்ட பயனுக் கருதாமல்—வண்டமிழைப்
பேணி வளர்த்திடலாற் பெத்தாச்சிப் பேர்பொருந்தப்
பூணும் புனிதனையே போற்று. (73)

*நன்றியொன்று கோடியென நாடுங் குணநலமும்
வென்றியென்று மோங்கும் வினைத்திறமும்—இன்றமிழைக்
காக்குந் தமிழ்ச்சங்கக் காரியநிர் வாகமதில்
ஊக்கமும் வாய்ப்ப வுயர்ந்து. (74)

கண்ணுங் கருமமெலாங் கண்ணன் செயலெனவே
எண்ணு முயர்நலமு மிங்கிதமுங்—கண்ணியமு
மன்னும்டீ. ஸீ.ஸ்ரீநிவாஸன்றன் வாழ்க்கையினை
உன்னுந் தமிழ்ப்பா வுவந்து. (75)

தேவா லயம்புதுக்கிச் செப்பனிடு நற்பணிக்கும்
நாவாற் பயிலவரு நான்மறைக்கும்—ஈவார்தம்
சிந்தைக் கமுதூட்டுஞ் சீர்மையாற் செந்தமிழே
அந்தக் குலவணிகர்க் காய். (76)

அத்துணைச் சீரும் அரன்மால் திருவருளும்
தத்த முரிமை தனைப்போற்றும்—உத்தமர்தம்
நன்மதிப்பும் நன்கொடையும் நண்ணி நலம்பெறுநம்
தொன்மொழிக்குச் சோர்வுளதோ சொல். (77)

இன்ன தமிழ்மொழியை ஏற்றுத் தமிழரென
மன்னு மிசையான் மணம்பெறுநாம்—சின்னாளாய்த்
தம்முரிமை கைவிட்டோம் தாய்பழிக்குஞ் சேயானோம்
அம்மவரு புன்மைபெரி தாம். (78)

---

* இதுமுதலிரண்டுங் குளகம்.

ஆங்கிலங் கற்றுங் கதன்பெருமை யேபேசி
வீங்குஞ் செருக்கால் வெகுண்டிகழ்ந்தே—தேங்குலவு
தாய்மொழியைப் பேணுநம் சர்வகலா சங்கஞ்செய்
நோய்மைகொடி தென்றே நுவல். (79)

கற்றே மறிந்தேம் கலைச்சங்கத் தோங்குபுகழ்
பெற்றே மெனமகிழ்ந்து பேசுவீர்—கற்றதனு
லாயபய னென்கொல் அருமைத் தமிழ்மலர்ந்தாங்
கேயுங் கலைமணவா தேல். (80)

திருமயிலை யொற்றியூர் தெற்குவடக் காக
இருபெரியோர் மெய்ப்பதமாங் கெய்த—வருமதுரப்
பைந்தமிழ் வீசிப் பரிமளிக்குஞ் சென்னைதனில்
வந்துந் தமிழ்வாடு மா. (81)

தக்க தலமுந் தருணமும் வாய்த்தனநம்
பக்கத் துணைகூடிற் பாங்குறுமே—எக்கலைக்கு
முன்றோன்றி நிற்கு முதுமொழியா மாரியத்தைத்
தன்றோழ னென்னுந் தமிழ்க்கு. (82)

கற்றவருட் சென்னைக் கலாசங்கத் தார்மதிக்கப்
பெற்றொளிரும் எம்.ஏ.ப் பெயரோங்கி—நற்றமிழும்
போற்றிக் கலைவளர்த்த பூண்டிரங்க நாதனைப்போல்
ஆற்றப் புகழ்படைத்தா ரார். (83)

மாசற்ற மேலோர் மனோன்மணீ யென்றேத்தும்
தேசுற்ற நாடகநூல் செப்பியே—தேசத்திற்
செந்தமிழு மாங்கிலமுஞ் சேர வளர்த்தவருட்
சுந்தரனை ஒப்பார்யார் சொல். (84)

எண்ணி லெழில்வேந்த ரெண்ணில் கலைவாணர்
மண்ணிற் றமிழோம்பி மாண்புற்றூர்—எண்ணுங்கால்
இந்நாளு முத்தமிழ்கற் றேற்றமுறூஉஞ் சிலருளர்
அன்னார்தம் சீரோது வாம். (85)

*முச்சிரபு ரத்துதித்தே முத்தமிழ்ப்பா வாணர்குழாம்
உச்சிகரஞ் சேர்க்கு முரிமையுடன்—விச்சைமிகு
மீனாட்சி சுந்தரப்பேர் மேவுகவி ராசனைப்போல்
ஆனைப் புகழ்படைத்தா ரார். (86)

மச்சேறி மங்கி மறைந்தபல வேட்டினையும்
அச்சேற வைத்த வருந்திறலான்—மெச்சவரு
நாத்திறமார் ஆறுமுக நாவலன் நந்தமிழ்க்கு
வாய்த்தநிதி யென்றே வழுத்து. (87)

உத்தம தானபுர மோங்கத் தமிழாய்ந்து
புத்தக தானம் புரிந்தோம்பி—முத்தமிழ்நூல்
ஆய்வோர்க் கமுதிங் கருள்சாமி நாதப்பேர்த்
தூயோனை நெஞ்சே துதி. (88)

மன்னர் மதிப்ப மகாமண் டலமதிப்பப்
பன்னருமஹாமஹோபாத்யாய—ரென்னவரும்
உத்தமப்பேர் பூண்டிங் கொளிர்சாமி நாதனைப்போல்
முத்தமிழ்க்கார் தொண்டுசெய்தார் முன். (89)

ஆயுந் தமிழ்நூ லருமையெலாம் பேரவைக்கட்
சீய மெனமுழங்கிச் செப்புவோன்—நேயமுறு
சீராஜ ராஜேந்த்ரச் செம்மல் மகிழ்கவிஞன்
ரா.ராக வையங்கா ராம். (90)

இன்ன கலைஞ ரெழினுமம் நம்மனத்திற்
கன்னற் சுவைபோற் கசிந்தூற—என்னேநாம்
செந்தமிழை முன்னேறச் செய்யாது நாளுலப்பிச்
சிந்தை கலங்கும் செயல். (91)

தூய தமிழகத்துத் தோன்றும் வடமலையும்
பாயு நதியும் பனிக்கடலும்—நேயமுடன்
தெய்வத் தமிழ்மொழியின் சீரே தெரிப்பனவம்
மெய்யைச் சிறிதாய்வா மேல். (92)

* முச்சிரபுரம்=திரிசிராப்பள்ளி (Trichinopoly.)

ஏற்பரிதாய் முத்தமிழ்க்கோ ரெல்லையாய் ஏற்போர்க்கு
மேற்பதமாம் பாங்களிக்கும் வேங்கடம்போல்—நாற்பொருளும்
தந்தருள்பு ரிந்துவளஞ் சார்தலாற் றரணியிற்
செந்தமிழும் நந்திருமால் சேர்வு. (93)

தொண்ட ரகமகிழுந் தொண்டை வளநாட்டில்
வண்டமிழே பாலாறாய் வந்தொழுகப்—புண்டரிகச்
செங்கணனு முக்கணனுஞ் சேர்தலங் *கஞ்சியென்பர்
அங்கண்மா ஞாலத் தவர். (94)

வெண்ணெய்தயிர் பால்பெருகி வேண்டுங் கவிக்கிணங்கிப்
பெண்ணைமணங் கூட்டுவித்த பெண்ணையே—கண்ணன்
பதம்பரவு மூவர்தமிழ் பாடும் பதிவாய்த்
திதம்புரியு மாறென் றியம்பு. (95)

குடவரையின் வீழ்ந்தொழுகிக் கொங்குலவிப் பல்லா
றடைதருமா காவிரிபோ லான்றே—படவணைசேர்
நாதருக்கு மாலையிட்டு நல்வள மீன்றுலகிற்
போதருமே தென்சொற் புனல். (96)

குறுமா முனிவன்கா குத்தனிவர் மேனாட்
செறுமா றிழைத்தபிழை தேர்ந்தோ—மறுமேவாச்
செந்தமிழுஞ் சேர்ந்தொழுகச் சேதுபதி வாவிபுக்காய்
சிந்துபுகா வையையே செப்பு. (97)

தமிழ்மலையின் வீழ்ந்தினிய சாரலா லென்று
மமிழ்தொழுகு மம்பொருநை யாறாய்த்—துமைதழுவும்
நெல்லைவேய் முத்தனையே நெஞ்சிற் றுதித்துவளம்
புல்லுமே தென்சொற் புனல். (98)

சத்திக்கு முக்கடலுஞ் சந்திக்கு முத்தரையு
முத்திக்கு மொய்த்தணுகி முத்தமிடு—மெய்த்துறைசேர்
கன்னிக் குமரியினிற் காண்பாமே முத்தமிழார்ப்
பென்னக் குமுறு மிசை. (99)

---

* 'கஞ்சி'='காஞ்சி' என்பதன் குறுக்கல்விகாரம்.

பையரவப் பாய்சுருளப் பைந்துளவத் தேனொழுக
மையிருளிற் பண்டை மறையொலியும்—மெய்யன்பர்
சிந்தையும் பின்றொடரச் சென்ற கருமுகிலே
சந்ததமு நந்தமிழ்க்குச் சார்பு. (100)

தொழுதழுத வாதவூர்த் தொண்டற்காப் பண்டு
வழுதி கசையடியும் வாங்கிப்—பழுதகற்றும்
சொக்கர் விளையாட்டே தூய தமிழ்மொழியின்
தக்க நிலைநாட்டுஞ் சான்று. (101)

உம்பர் துயர்தீர்த்த வொள்வேற் குமரனையே
நம்பி நலம்பெறூஉம் நக்கீரன்—வெம்பிலத்தில்
வாடாம லின்பமுற வாய்த்த பெருந்துணையாம்
பீடார் தமிழ்மொழிநம் பேறு. (102)

வாடுந் தருமி வளம்பெறமுன் பொற்கிழிக்குப்
பாடுங் கவியுதவு பைந்தமிழே—ஓடியுழல்
நாய்க்கும் பரமபதம் நல்குந் தனிக்குருகூர்ச்
சேய்க்கு மகிழ்வூட்டுந் தேன். (103)

வன்றொண்டன் பெற்றுமகிழ் வண்ணவிழிப் பார்வைக்குந்
தன்றொண்டு காட்டிப்பைந் தார்சூட்டி—மன்றற்
புதுவைப்பூங் கோதைமகிழ் பூவைப்பூ வண்ணன்
வதுவைக்கும் வாய்த்ததமிழ் வாழ்த்து. (104)

கன்மிதக்கச் செய்துங் கபாடந் திறந்தடைத்தும்
சொன்மதித்து நெல்லுஞ் சுவணமும்—முன்வந்
தளந்துஞ் சிறந்த வருந்தமிழே யன்பர்க்
குளந்தொறுந் தேன்பிலிற்று மூற்று. (105)

மாதுபங்கர் தாள்கமழ வையைப் புனல்கமழச்
சேதுபதி வேந்தர் செவிகமழ—வேதநிகர்
நாயனார் பாக்கமழ நால்வர்திரு நாக்கமழப்
பாயுமோர் பைந்தமிழைப் பாடு. (106)

மாதவனார் தாள்கமழ மாறன் மறைகமழச்
சேதுபதி வேந்தர் செவிகமழப்—போதமிகு
கம்பன் கவிகமழக் கற்றோ ருளமகிழப்
பம்பும் பசுந்தமிழைப் பாடு. (107)

நீரும் நெருப்பும் நெடுமலைய முந்தமிழின்
சீரு மருந்திறனுஞ் செப்புமால்—தேருங்கால்
என்பும்பெண் ணாக விலையோ புளிநிழற்க
ணின்பத் தமிழ்பழுத்த தென். (108)

ஓது மறைநான் குகநான்கு பாநான்கு
நாதன் மகிழ்கவிஞர் நால்வரே—சீதமலர்ப்
பங்கயமா மாதருளாற் பாண்டித் துரைநிறுவச்
சங்கமுமோர் நான்கென்றே சாற்று. (109)

திருவாழி வாழி திருநீறு வாழி
மருவார் வெருவுறுவேல் வாழி—கருவாரா
தோம்புந் தமிழ்மொழியு முத்தமர்தஞ் சங்கமும்
காம்பிலைபோல் வாழி கலந்து. (110)

N. V. சுந்தரராஜையர் B. A., L. T.,
உதவிக்காரியதரிசி, மதுரைத் தமிழ்ச்சங்கம்.

## 1917-ஹு ஜனவரிமீ 22உ காலை 9-மணிக்கு நடந்த மதுரைத் தமிழ்ச்சங்கத்தின் காரியநிர்வாஹ ஸபையில் முடிவுசெய்யப்பட்ட தீர்மானங்களின் விவரம்.

—:o:—

1. கனம்பொருந்திய இராமநாதபுரம் ராஜா ஸ்ரீமான் பா. ராஜ ராஜேச்வர ஸேதுபதியவர்கள் —அக்கிராசநாதிபதி.
2. மகா-ா-ா-ஸ்ரீ கான்பகதூர் H. அப்தல்கபான் சாஹிப் அவர்கள்.
3. „ T. C. ஸ்ரீநிவாஸையங்கார் அவர்கள், B. A. B. L.
4. „ V. S. இராமஸ்வாமி சாஸ்திரியவர்கள். B.A.,B.L.

இவர்கள் வந்திருந்தார்கள்.

தீர்மானங்கள்:—

I. 1916-ஹுத்தின் செப்டம்பர், அக்டோபர், நவம்பர், டிசம்பர் ஆக 4-மாதங்களின் வரவு செலவு கணக்கு அங்கீகரிக்கப்பட்டது.

II. சங்கத்தின் கட்டடத்துக்காகவும் மூலதனத்துக்காகவும் அடியிற் குறித்த விவரப்படி நன்கொடைபுரிந்த கனவான்களைச் சங்கத்தின் சாசுவத அங்கத்தினராகச்சேர்த்து அவர்களுக்கு வந்தனம் அளிக்கத்தீர்மானிக்க லாயிற்று.

1. மகா-ா-ா-ஸ்ரீ காரைக்குடி சா. லெ. செட்டியப்பசெட்டியாரவர்கள் ரூ 275.
2. „ ஷெயூர் க. தெ. க. அளகப்பசெட்டியார் அவர்கள் ரூ 350.

III. 'குறுந்தொகை' என்னும் பழையநூல் கையெழுத்துப்பிரதி ஒன்றினைச் சங்கம் புத்தகசாலைக்கு இனமாகஅளித்த மகா-ா-ா-ஸ்ரீ S. இராதாகிருஷ்ணய்யர் அவர்கட்குச் சங்கத்தார் நன்றிபாராட்டி வந்தனம் அளிக்கத்தீர்மானிக்கலாயிற்று:—

IV. சென்னைமாகாணச் சட்டநிரூபணசபையின் அங்கத்தினராகத் தெரிந்தெடுக்கப்பெற்ற கனம் K. இராமையங்கார் அவர்கட்கு வந்தனோபசாரம்கூறிச் சங்கத்தார் அனுப்பிய கடிதத்தை அங்கீகரித்து, ஷெயார் 28-8-16ல் எழுதிய பதில் கடிதத்தைப் பார்வையிட்டு ரிக்கார்டில் வைக்கப் பட்டது.

V. அடியிற்கண்ட சங்கச்சிப்பந்திகள், தத்தமக்கேற்பட்ட விசேஷ காரணங்களைமுன்னிட்டு ரஜாப்பெறவேண்டியிருந்ததில்: அக்காரணங்களை விசேஷரஜாநாட்களாகப்பாராட்டிச்சம்பளத்துடன் ரஜா அளிக்கும்படி அவர்கள் கொடுத்திருந்த மனுக்களைச் சங்கத்தார் ஆலோசனைசெய்து பின்னர்க் குறித்தபடி தீர்மானிக்கலாயிற்று.

(1) எழுத்தாளர் நல்லசிவன்பிள்ளை ரஜாஎடுத்திருந்தநாட்களில் அவர்க்குரிய 12 நாள் 'காஷுவல் லீவ்'போக மீதநாளைக்குச் சம்பளத்தைப் பிடிக்க.

(2) அவ்வாறே கலாசாலை உபாத்தியாயர் கந்தசாமியாருடைய மனுவுக்கும் பைசல்செய்ய.

(3) அச்சாபீசின் சிப்பந்திகளாகிய G. சுந்தரேசையர், N. விஜயேந்த்ரராவ், இவ்விருவர்க்கும் முழுதும் சம்பளப்பிடித்தம் செய்ய.

(4) கலாசாலை உபாத்தியாயர் ஹரிஹரமையர் 4 நாளைக்குரஜா எடுத்திருந்ததில் அவர்க்குரிய 3½ நாள் காஷுவல்லீவ்போக மீதம் ½ நாளைக்குச்சம்பளப்பிடித்தம்செய்ய.

VI. சென்னை, புரசபாக்கத்தில் ஸ்தாபிக்கப்பெற்றுநடந்துவருகிற "Young Men's Association Night School"என்ற பள்ளிக்கூடத்தின் கௌரவசூபிரண்டெண்டு அவர்கள் தம்பள்ளிக்கூடமாணவர்களைத் தமிழ்ச் சங்கத்தில் நடத்தப்பட்டுவரும் ஆங்கிலத்தமிழ்ப்பரீக்ஷைக்கு ஏற்றுக்கொள்ளத்தக்கவர்களாகக்கோரி எழுதியகடிதங்களைப் பார்வையிட்டதில் இத்தகையவிஷயங்கள் சங்கத்தின் பொதுக்கூட்டத்தால் ஆலோசிக்கப்பெற்று முடிவுபெறவேண்டுமென்று தீர்மானிக்கலாயிற்று.

VII. தொல்காப்பியத்தை உரைகளுடன் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கவேண்டிய விஷயமாய், மகா-௱-௱-ஸ்ரீ சிவசைலம் T. பொன்னம்பலம் பிள்ளையவர்கள், பரோடா ஸமஸ்தானாதிபதியாகிய Gaekwar மஹாராஜா அவர்கட்கு விடுத்திருந்த விஷயவிவரப்பத்திரிகை (Memorandum)க்குப் பிரதிஒன்றினைக் கனம்பொருந்திய பிரஸிடெண்டு அவர்கள் பார்வைக்கு அனுப்பியிருந்ததில் ஷை பத்திரிகையைப்பற்றி ஆலோசித்துப் பிற்கூறியபடி தீர்மானிக்கலாயிற்று.

"நமது தமிழ்ச்சங்கத்தைப்பற்றி, அப்பத்திரிகையில் வெளியிட்டிருக்கிற அபிப்பிராயமுழுமையும் அசம்பாவிதமென்றும் அனுசிதமென்றும் உண்மைக்குச் சற்றேனும் ஒவ்வாதென்றும், இத்தீர்மானத்துக்குச் சரியான நகல் ஒன்று பிள்ளையவர்கட்கு அனுப்பவேண்டுமென்றும்"

VIII. மீட்டிங்கில் ஆலோசித்து முடிவுசெய்யப்பெற்ற ஏனைய விஷயங்கள்:—

(1) "திருசிரபுரம் நாஷனல் ஹைஸ்கூல் தமிழ்ப்பண்டிதர் ம-ள-ள-ஸ்ரீ A. M. சடகோபராமானுஜாசாரியர் கனம் பிரஸிடெண்டு அவர்கட்கு விடுத்திருந்த மனுவைப் பார்வையிட்டதில், 'மாறனலங்காரம்' புத்தகம் ஒன்று சங்கத்திலிருந்து அவருக்கு இனாமாகக்கொடுக்கலாம்: ஆயினும், அவரெழுதிய மனுவின்தோரணை உசிதமுறை அல்ல என்றும்

(2) சங்கம் கலாசாலையிற் படித்துவருகிற செளராஷ்டிர மாணவன் கிருஷ்ணையனுக்குச் சங்கத்திற்கொடுத்துவந்த உபகாரச்சம்பளவிஷயமாய்ச் சங்கத்தாருடைய அபிப்பிராயத்தைச் செளராஷ்டிர சபையாருக்கு, சங்கம் கௌரவகாரியதரிசிகள் மூலம் தெரிவிக்கத்தக்கதென்றும்

(3) 'செந்தமிழ்'ப்பத்திரிகையை தமக்கு இனாமாக அனுப்பவேண்டிச் சேலத்திலிருந்து "கலைமகள்கழகம்" காரியதரிசி, கனம் பிரஸிடெண்டு அவர்கட்கு எழுதிய மனுவைப்பார்வையிட்டதில், அக்கழகத்தின் அந்தஸ்து முதலிய விவரங்கண்டு ரிக்கார்டு ஆதாரவுடன் சங்கத்துக்குத் தெரியப்படுத்துமாறு வினவும்படிக்கும்,

(4) 'Tamil cyclopædia' என்னும் நாமம் பூண்டு ஆபீஸ்முறையில் நமது சங்கப்புஸ்தகங்களை இனாமாகத் தமக்கு அளிக்கும்படிகோரி, ஒருவர் எழுதிய கடிதத்தைப் பார்வையிட்டதில், ஷை ஆபீஸ் முறைப்படி சர்க்காரால் அங்கீகரிக்கப்பெற்றதா என்னும் விவரமறிதற்கு, அவரை வினவிப்பதில் அறியும்படிக்கும்,

(5) மதுரையில், சென்ற 1916-ம் ௵ மேமீ கூடிய 'சென்னைமாகாணக் கான்பரன்ஸ்' கூட்டத்தின் நடபடிக்கைகளை நமது தமிழ்ச்சங்கமுத்திராசாலையிற் பிரசுரம் செய்யப்பட்டதில், ஷை புஸ்தகத்தை வெளியிடுவதற்குத் தான் நேரில் எடுத்துக்கொண்ட விசேஷ சிரமத்துக்காகச் சங்கத்தாரிடம் பொருளுதவிகோரிச் சங்கம் மானேஜர் எழுதிய மனுவைப் பார்வையிட்டதில், ஷை மனு ரிக்கார்டுசெய்யத்தக்கதென்றும் தீர்மானிக்கலாயிற்று.

(Signed) B. Raja Rajeswaran,
*President,*
Madura Tamil Sangam.

22—1—17.